# சாமுவேலின் புத்தகம்

பாடம் 3

## தாவீது ராஜா

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

முந்தைய ஆசீர்வாதங்கள் ........ 3

அமைப்பும் உள்ளடக்கமும் ........ 3

எபிரோனில் (2 சாமுவேல் 2:1–5:5) ........ 5

எருசலேமில் (2 சாமுவேல் 5:6–9:13) ........ 8

கிறிஸ்தவ பயன்பாடு ........ 16

தேவனுடைய உடன்படிக்கைகள் ........ 16

தேவனுடைய ராஜ்யம் ........ 18

பிற்கால சாபங்கள் ........ 21

அமைப்பும் உள்ளடக்கமும் ........ 21

ஆரம்ப பிரச்சனைகள் (2 சாமுவேல் 10:1–12:31) ........ 23

நீடித்த தொல்லைகள் (2 சாமுவேல் 13:1–20:26) ........ 29

கிறிஸ்தவ பயன்பாடு ........ 34

தேவனுடைய உடன்படிக்கைகள் ........ 35

தேவனுடைய ராஜ்யம் ........ 36

தொடரும் நன்மைகள் ........ 38

அமைப்பும் உள்ளடக்கமும் ........ 38

வம்சப் பாடல் (2 சாமுவேல் 22:1-51) ........ 42

வம்சத்தின் கடைசி வார்த்தைகள் (2 சாமுவேல் 23:1-7) ........ 44

வெற்றிகரமான போர்வீரர்கள் (2 சாமுவேல் 21:15-22) ........ 45

வெற்றிகரமான போர்வீரர்கள் (2 சாமுவேல் 23:8-38) ........ 46

தேவனுடைய சாபத்திலிருந்து விடுதலை (2 சாமுவேல் 21:1-14) ........ 47

தேவனுடைய சாபத்திலிருந்து விடுதலை (2 சாமுவேல் 24:1-25) ........ 48

கிறிஸ்தவ பயன்பாடு ........ 50

தேவனுடைய உடன்படிக்கைகள் ........ 51

தேவனுடைய ராஜ்யம் ........ 53

முடிவுரை ........ 54





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஒரு முதியவர் ஒருமுறை சபைத் தலைவர்களை இவ்வாறு விவரித்தார்: ”அவர்கள் சரியானவர்களாக இல்லையென்றாலும் நான் கவலைப்படவில்லை. அதற்குக் காரணம் கிறிஸ்து இன்னும் ராஜாவாக இருக்கிறார்” இந்த ஞானி என்ன சொல்ல வருகிறார் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்கிறோம். நமது தலைவர்கள் சரியானவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் எவ்வளவு விரும்பினாலும், அவர்கள் ஒருபோதும் அப்படி இருப்பதில்லை. ஆனால் அவர்களுக்கு தோல்விகள் இருந்தபோதிலும், எதிர்காலத்திற்கான நமது நம்பிக்கைகள் அனைத்தையும் கிறிஸ்துவில் வைக்க முடியும், ஏனென்றால் அவர் நம்முடைய பரிபூரண ராஜாவாவார்.

பல வழிகளில், சாமுவேல் புத்தகத்தின் எழுத்தாசிரியர், ஆரம்பத்தில் வாழ்ந்த பூர்வ இஸ்ரவேலரிடம் அதேபோன்ற கண்ணோட்டத்தையே அளித்தார். எதிர்காலத்தில் தேவனுடைய ராஜ்யத்தை பூமியின் எல்லைகள் வரை பரப்புவதாக தாவீதின் நீதியுள்ள குமாரனை தேவன் வாக்குத்தத்தமாக அளித்திருந்தார் என்பதை அவரும் அவருடைய ஆரம்ப வாசகர்களும் அறிந்திருந்தனர். ஆனால், தாவீதின் குடும்பத்தார் செய்த தவறுகள், இந்த வாக்குறுதி நிறைவேறுமா என்ற சந்தேகத்தை எழுப்பியது. ஆகையால், தாவீதின் இந்த பெரிய குமாரனுக்கான தேவனின் வாக்குறுதி உறுதியானது என்று இஸ்ரவேலில் உள்ள விசுவாசிகளுக்கு உறுதியளிக்க தாவீதின் மீதும் அவரது வீட்டாரின் மீதும் இருக்கிற தேவ தயவைப் பற்றி சாமுவேலின் ஆசிரியர் எழுதினார்.

சாமுவேலின் புத்தகத்தில் தாவீதின் ஆட்சியானது கிறிஸ்தவர்களாகிய நம்மை இதேபோன்ற வழிகளில் கிறிஸ்துவில் நமது நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்த அழைக்கிறது. தேவனுக்கு உண்மையுள்ள சேவை செய்வதில் நாம் இன்னும் குறைவாகவே இருக்கிறோம். ஆனால் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. தாவீதின் மீதும் அவருடைய வீட்டார் மீதும் தேவனுடைய தயவு கிறிஸ்துவில் நிறைவேறும், ஏனென்றால் அவர் நம்முடைய பரிபூரண நீதியுள்ள ராஜாவாவார்.

*சாமுவேலின் புத்தகம்* என்கிற நமது தொடரின் மூன்றாவது பாடத்திற்கு ”தாவீது ராஜா” என்று தலைப்பிட்டுள்ளோம். இந்த பாடத்தில், சாமுவேலின் புத்தகத்தின் கடைசி முக்கிய பகுதியில், தாவீதுக்கும் அவரது வீட்டாருக்கும் தேவனுடைய தயவை வெளிப்படுத்தும் அதிகாரங்களில் கவனம் செலுத்துவோம். நாம் பார்க்கப்போகிறபடி, நம்முடைய புத்தகத்தின் இந்தப் பகுதி

பூர்வ இஸ்ரவேலர்களுக்கு தாவீதைப் பற்றிய நேர்மையான ஆனால் நம்பிக்கையூட்டும் காட்சியை அளித்தது. இன்று நாம் தாவீதின் பெரிய குமாரனாகிய இயேசுவுக்கு சேவை செய்கையில் அது நம்மை உற்சாகப்படுத்துகிறது.

இந்தத் தொடர் முழுவதும், இஸ்ரவேல் மக்கள் பிளவுபட்ட முடியாட்சியின் போது அல்லது பாபிலோனிய நாடுகடத்தலின் போது சோதனைகளை எதிர்கொண்டபோது சாமுவேலின் ஆசிரியர் தனது புத்தகத்தை எழுதினார் என்பதை நாம் பார்த்தோம். அவர் அவர்களின் வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்த முயன்றார், ஆனால் ஒட்டுமொத்தமாக, இது அவரது மேலோட்டமான, அசல் நோக்கத்தை இந்த வழியில் சுருக்கமாகக் கூற உதவுகிறது:

> இஸ்ரவேல் அரச பதவிக்கு மாறியது தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கையில் உச்சக்கட்டத்தை அடைந்தது, இதனால் இஸ்ரவேல் தேவனுடைய ராஜ்யத்திற்கான தங்கள் நம்பிக்கையை தாவீதினுடைய வீட்டின் நீதியான ஆட்சியில் வைக்கும் என்பதை சாமுவேலின் ஆசிரியர் விளக்கினார்.

இந்த சுருக்கம் சுட்டிக்காட்டுவது போல, சாமுவேலின் ஆசிரியர் தனது நாளுக்கு முன்பு நடந்த சில வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி எழுதினார், இது இஸ்ரவேலின் அரச மாற்றம் எவ்வாறு தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கையில் உச்சக்கட்டத்தை அடைந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. தாவீதினுடைய குடும்பத்தின் நீதியுள்ள ஆட்சியில் தேவனுடைய ராஜ்யத்தின் எதிர்காலத்திற்கான தங்கள் நம்பிக்கைகளை வைக்கும்படி அன்றைய இஸ்ரவேல் வாசகர்களை அழைக்கவும் அவர் தம்முடைய சரித்திரப் பதிவை வடிவமைத்தார்.

முந்தைய பாடங்களில், சாமுவேலின் புத்தகம் இந்த விஷயங்களை மூன்று முக்கிய பிரிவுகளாக கையாள்கிறது என்று பார்த்தோம்: 1 சாமுவேல் 1–7 இல் அரசாட்சிக்கான சாமுவேலின் அறிமுகம்; 1 சாமுவேல் 8 – 2 சாமுவேல் 1 இல் சவுலின் தோல்வியுற்ற ஆட்சி; மற்றும் 2 சாமுவேல் 2-24 இல் தாவீதின் நீடித்த அரசாட்சி. இந்த பாடத்தில் நமது புத்தகத்தின் இந்த மூன்றாவது பிரிவில் நம் கவனத்தை செலுத்துவோம்.

தாவீதின் நிலைத்திருக்கும் அரசதிகாரத்தைப் பற்றிய பதிவு மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது: 2 சாமுவேல் 2-9 இல், தேவனிடமிருந்து தாவீது பெற்ற ஆசீர்வாதங்களின் ஆரம்ப ஆண்டுகள்; 2 சாமுவேல் 10-20 இல் தேவனிடமிருந்து வந்த சாபங்களின் பிற்கால ஆண்டுகள்; மற்றும் 2 சாமுவேல் 21-24 இல் அதன் தோல்விகள் இருந்தபோதிலும், தாவீதினுடைய வீட்டின் மூலம் வழங்கப்படும் தொடர்ச்சியான நன்மைகள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

2 சாமுவேல் 2-9 இல் தேவனிடமிருந்து தாவீது பெற்ற முந்தைய ஆசீர்வாதங்களைப் பார்ப்பதன் மூலம் தாவீது ராஜாவைப் பற்றிய நமது பாடம் தாவீதின் நீடித்த அரசாட்சியின் இந்த மூன்று முக்கிய பகுதிகளை ஆராயும்.

# முந்தைய ஆசீர்வாதங்கள்

இந்தத் தொடர் முழுவதும், தாவீதின் ஆட்சியைப் பற்றிய நமது ஆசிரியரின் முன்னோக்குகள் அவரது புத்தகத்தின் நோக்கத்திற்கு முக்கியமானவை என்பதை நாம் கண்டோம். தாவீது ராஜாவாக ஆனபோது, இஸ்ரவேலர் நியாயாதிபதிகளின் ஆட்சியிலிருந்து அரசர்களின் ஆட்சிக்கு மாறியது இறுதியாக நிறைவடைந்தது. தாவீதினுடைய ஆட்சியின் போதுதான் இஸ்ரவேல் தாவீதின் நிரந்தர வம்சத்தின் ஆட்சியின் கீழ் ஒன்றுபட்ட ஒரு முழு அளவிலான ராஜ்யமாக மாறியது. தாவீதினுடைய ஆட்சியின் இந்த உச்சக்கட்ட தன்மையை சிறப்பித்துக் காட்ட, அவருடைய ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் தேவன் எவ்வாறு, ஏன் முன்னோடியில்லாத ஆசீர்வாதங்களை ஊற்றினார் என்பதைப் பற்றிய பதிவுடன் நமது ஆசிரியர் தொடங்குகிறார்.

தாவீதின் ஆரம்ப ஆண்டுகளில் ஆசீர்வாதங்களை உள்ளடக்கிய அத்தியாயங்களை இரண்டு வழிகளில் பார்ப்போம். அவற்றின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தின் வெளிச்சத்தில் அவற்றின் சரியான அர்த்தத்தை முதலில் ஆராய்வோம். பின்னர் சாமுவேலின் இந்த பகுதி கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களான நம் வாழ்க்கையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் பார்ப்போம். தேவனிடமிருந்து தாவீது பெற்ற முந்தைய ஆசீர்வாதங்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துடன் ஆரம்பிக்கலாம்.

## அமைப்பும் உள்ளடக்கமும்

இந்த அதிகாரங்கள் அநேக சம்பவங்களைத் தொடுகின்றன, ஆனால் நம்முடைய புத்தகத்தின் மற்ற ஒவ்வொரு பகுதியையும் போலவே, இந்த சம்பவங்களும் இரண்டு முக்கிய தலைப்புகளில் திரும்பத் திரும்ப கவனத்தை ஈர்க்கின்றன. முதலாவதாக, தாவீதின் கீழ் இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யம் எவ்வாறு முன்னேறியது என்பதை நமது ஆசிரியர் காட்டினார். தாவீது இஸ்ரவேலின் எல்லா கோத்திரங்களையும் ஒன்றுபடுத்தினார், எருசலேமை தனது புதிய தலைநகராக்கினார், எருசலேமை அரணாக்கி, அங்கே தனது அரண்மனையைக் கட்டினார். ஆனால் மிக முக்கியமாக, இந்த அதிகாரங்களில் தாவீதின் வீட்டை இஸ்ரவேலின் நீடித்த அரச வம்சமாக மாற்றுவதாக தேவன் வாக்குறுதி அளித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரண்டாவதாக, சாமுவேலின் ஆசிரியர் இந்த அதிகாரங்களில் தாவீதின் வெற்றிகளை தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியலின் அடிப்படையில் விளக்கினார். தாவீது சாதித்த அனைத்தும் தெய்வீக கருணையால் விளைந்தன என்று நமது ஆசிரியர் சுட்டிக்காட்டினார். அதேசமயத்தில், மனித உண்மைப் பற்றுறுதியைப் பற்றிய தேவனுடைய கட்டளைகளை தாவீது தொடர்ந்து நிறைவேற்றினார் என்பதையும் அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். இந்த அதிகாரங்களில், ஆராதனை மற்றும் ராஜ அதிகாரத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாக மோசேயின் சட்டங்களின் தராதரங்களுக்கு தாவீது விசேஷமாக உண்மையுள்ளவராக இருந்தார். தாவீதின் உண்மைப் பற்றுறுதியின் காரணமாக, அவர் தேவனிடமிருந்து மகத்தான ஆசீர்வாதங்களின் விளைவுகளைப் பெற்றார். மொத்தத்தில், அவரது அன்றைய வாசகர்களுக்கு நமது ஆசிரியரின் பாடம் போதுமானதாக இருந்தது: தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கான ஒவ்வொரு நம்பிக்கையும் தாவீதின் உண்மைப் பற்றுறுதியிலும், தலைமுறை தலைமுறையாக அவருடைய குமாரர்களின் உண்மைப் பற்றுறுதியிலும், இறுதியாக, வரவிருந்த தாவீதின் பரிபூரண நீதியுள்ள குமாரனிலும் சார்ந்திருந்தது.

> சாமுவேல் புத்தகத்தில் நாம் காணும் தாவீதின் ஆசீர்வாதங்கள் அவரது வம்சத்தின் பிற்கால ராஜாக்களுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாகும். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், தேவனுக்கு தாவீது கீழ்ப்படிவதன் மூலம், நாம் "உபாகமக் கொள்கை" என்று அழைப்பதை அவர் உண்மையில் நிரூபித்தார், அதாவது: கீழ்ப்படிதல் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகிறது மற்றும் கீழ்ப்படியாமை சாபங்களைக் கொண்டுவருகிறது. தாவீது ஒரு ராஜாவாக ஆவதற்கு முன்பு, இஸ்ரவேலின் ராஜாவாக இருந்த இந்த காலத்திற்குள், தாவீது இன்னும் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்... தேவனுக்குக் கீழ்ப்படிந்ததன் மூலமும், தேவன் தான் தன்னை ராஜாவாக்கினார் என்பதை உணர்ந்த தாவீது, தேவனுடைய அறிவுறுத்தல்களையும், தேவனுடைய தீர்க்கதரிசியிடமிருந்து அவர் பெற்ற அறிவுறுத்தல்களையும் பின்பற்றுவதில் மிகவும் கவனமாக இருந்தார். அவர் பெலிஸ்தருடன் போரிட விரும்பியபோது, அவர் வெறுமனே எழுந்து செல்லவில்லை. அவர் செல்வது பொருத்தமானதா, அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை தேவனிடம் ஆலோசனை செய்வதை அவர் உறுதிப்படுத்திக் கொண்டார். "ஆம், போ" என்று பதில் கிடைத்தவுடன் அவர் செல்கிறார். 'போகாதே' என்று வரும்போது, அவர் அங்கேயே தங்கிவிடுகிறார். முக்கியமாக தேவனுக்குக் கீழ்ப்படிவதில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கவனம் செலுத்தும் அவரது அரசாட்சி பாணி, அவரைப் பின்பற்றிய பின்னர் வந்த ராஜாக்களுக்கு மிக மிக முக்கியமானது என்று நான் நினைக்கிறேன்.

– Rev. Dr. ஹும்பிரெ அகோக்யெரம்

தாவீதின் முந்தின ஆசீர்வாதங்களைப் பற்றிய பதிவு, பெலிஸ்தரின் சிக்லாகிலிருந்த தன் வீட்டிலிருந்து யூதாவின் பிராந்தியங்களுக்குள் வாழ்வதற்காக சென்றதிலிருந்து தொடங்குகிறது. இது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறது: முதலாவது, எபிரோனில் தாவீதின் அனுபவங்கள் 2:1–5:5; இரண்டாவதாக, எருசலேமில் அவரது அனுபவங்கள் 5:6–9:13.

## எபிரோனில் (2 சாமுவேல் 2:1–5:5)

எபிரோனில் தேவன் தாவீதை எப்படி ஆசீர்வதித்தார் என்பதை இரண்டு பகுதிகளாக நமது ஆசிரியர் பதிவு செய்கிறார். 2:1–4:12 இல் தாவீதின் அரசாட்சிக்கு வளர்ந்து வரும் ஆதரவுடன் அவர் தொடங்கினார்.

**வளர்ந்து வரும் ஆதரவு (2 சாமுவேல் 2:1–4:12).** தாவீதின் வளர்ந்து வரும் ஆதரவைப் பற்றிய விவரம் மூன்று அத்தியாயங்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு அத்தியாயத்திலும், தேவன் மீதான விசுவாசத்தின் விளைவாக தாவீதின் அரசாட்சிக்கு அதிகரித்த ஆதரவின் தேவனுடைய ஆசீர்வாதங்கள் கிடைத்தன.

முதல் அத்தியாயம் 2:1-4 இல் யூதாவை மையமாகக் கொண்டுள்ளது. இங்கே, தாவீது சவுலின் மரணத்திற்குப் பிறகு கர்த்தரிடம் வழிகாட்டுதலைக் கேட்டதன் மூலம் தன்னை தேவனுக்கு உண்மையுள்ளவனாகக் காட்டினார், பின்னர், தேவன் கட்டளையிட்டபடி, உடனடியாக சிக்லாகின் பாதுகாப்பை விட்டு யூதாவுக்குச் சென்றார். யூதாவின் மனுஷர் அவனை எப்ரோனிலிருக்கிற யூதா வம்சத்தின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினதுபோல, தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

அடுத்த அத்தியாயத்தில், 2:5-7 இல், தாவீது யாபேஸ்-கீலேயாத்தின் மக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றார். யாபேசு-கீலேயாத் மக்களை தாவீது தன்னுடைய எதிரிகளாக நடத்துவதற்கு நல்ல காரணம் இருந்தது. அவர்கள் சவுலுக்கு அவ்வளவு அர்ப்பணிப்புள்ளவர்களாக இருந்ததால், தங்கள் உயிரைப் பணயம் வைத்து சவுலையும் அவருடைய குமாரர்களையும் கண்ணியமான முறையில் அடக்கம் செய்தார்கள். ஆனால் தாவீது அவர்களைத் தாக்கவோ அச்சுறுத்தவோ இல்லை. அதற்கு பதிலாக, உபாகமம் 17:20 இல் தேவனுடைய உடன்படிக்கையின் தேவையை அவர் நிறைவேற்றினார், அங்கு ராஜாக்கள் தங்களை தங்கள் நாட்டு மக்களை விட சிறந்தவர்களாக கருதக்கூடாது என்று தேவன் கட்டளையிட்டார். தாவீது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யாபேசு-கீலேயாத்தின் மக்களை நன்றாக நடத்துவதாக சபதம் செய்தார். 7ஆம் வசனத்தில் அவர்களை உற்சாகப்படுத்தி, ”இப்போதும் நீங்கள் உங்கள் கைகளை திடப்படுத்திக்கொண்டு நல்ல சேவகராயிருங்கள், உங்கள் ஆண்டவனாகிய சவுல் மரித்த பின்பு, யூதா வம்சத்தார் என்னை தங்கள் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்” என்றார். இதன் விளைவாக, சவுலுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்த தாவீதை தேவன் ஆசீர்வதித்தார்.

யூதாவின் ஆண்களையும் கீலேயாத்தின் யாபேசின் ஆண்களையும் பற்றி அறிக்கை செய்த பிறகு, தாவீதின் அரசாட்சிக்கு வளர்ந்து வரும் ஆதரவை சிறப்பித்துக் காட்டும் மூன்றாவது அத்தியாயத்திற்கு நமது ஆசிரியர் திரும்பினார். இந்த மிக நீண்ட அத்தியாயம், 2:8–4:12 இல், சவுலின் தளபதியான அப்னேர் மற்றும் சவுலின் மகன் இஸ்போசேத் தலைமையில் ஒரு கிளர்ச்சியுடன் தொடங்குகிறது. இஸ்போசேத் உண்மையில் இஸ்பால் என்று பெயரிடப்பட்டார். ”கர்த்தருடைய மனிதன்” என்று பொருள். ஆனால் நமது ஆசிரியர் அவருடைய உண்மையான குணத்தை வெளிப்படுத்த அவரை இஸ்போசேத் என்று அழைத்தார். அதற்கு ”வெட்கத்தின் மனிதன்” என்று பொருள். அப்னேர் இஸ்போசேத்தை இஸ்ரவேல் அனைத்தின் மீதும் அரசனாக்கி, தாவீதுடன் நீண்ட போரைத் தொடங்கினான். ஆனால்”தாவீது பலமாக வளர்ந்தார், அதே நேரத்தில் சவுலின் வீட்டார் பலவீனராக ஆனார்கள்” 3:1 என்று நமக்கு சொல்கிறது.

எப்ரோனில் தாவீதுக்கு அநேக குமாரர்கள் பிறந்தார்கள் என்று குறிப்பிட்டதன் மூலம் தாவீதின் அதிகரித்துவரும் பலத்தின் ஆசீர்வாதத்தை நம் ஆசிரியர் முதலில் விளக்கினார். சவுலின் குடும்பம் எவ்வாறு பலவீனமடைந்தது என்பதை விளக்க, அப்னேரும் இஸ்போசேத்தும் ஒருவருக்கொருவர் எதிராக திரும்பியதாக நமது ஆசிரியர் அறிவித்தார். பழைய ஏற்பாட்டின் பல பகுதிகள் சுட்டிக்காட்டுவது போல, எதிரிகள் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதன் மூலம் தேவன் பெரும்பாலும் தம்முடைய விருப்பமுள்ள மக்களுக்கு உதவ வந்தார். சவுலின் மறுமனையாட்டிகளில் ஒருத்தியை அப்னேர் எடுத்துக்கொண்டதாக பொய்யாக குற்றம்சாட்டியதன் மூலம் இஸ்போசேத் அப்னேருடன் மோதலை ஆரம்பித்தான். அப்னேர் தாவீதிடம் மாறி, தாவீதின் அரசாட்சியை ஆதரிப்பதில் தன்னோடு சேரும்படி இஸ்ரவேலின் மூப்பர்களை உற்சாகப்படுத்துவதன் மூலம் பதிலளித்தார். 3:18 இல், ”என் தாசனாகிய தாவீதின் கையால் என் ஜனமாகிய இஸ்ரவேலை இரட்சிப்பேன்” என்று தேவன் அறிவித்ததை அப்னேர் மூப்பர்களிடம் நினைவுபடுத்தியபோது, தாவீதுக்கு தேவன் வழங்கிய மகத்தான ஆசீர்வாதத்தை நாம் காண்கிறோம்.

சவுலின் குடும்பம் பலவீனமானபோது தாவீது எவ்வாறு பலமடைந்தார் என்பதை மேலும் வலியுறுத்த, அப்னேர் மற்றும் இஸ்போசேத்தின் மரணங்களை நமது ஆசிரியர் கவனமாக விவரித்தார். இந்த இரண்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சந்தர்ப்பங்களிலும், தாவீது எந்தத் தவறும் செய்யவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். முதலாவதாக, தாவீதின் தளபதியான யோவாப், அப்னேரைக் கொன்றதாக அறிவித்தார். தாவீதின் நீதியைக் காட்ட, நமது ஆசிரியர் உடனடியாக 3:26 இல், "தாவீதுக்கு அதைப் பற்றி தெரியாது" என்று கூறினார். மேலும், அதைக் கேள்விப்பட்ட பின்பு, தாவீது 28-ஆம் வசனத்தில் தானும் தம்முடைய ராஜ்யமும் "அப்னேரின் இரத்தத்தினிமித்தம் என்றென்றைக்கும் குற்றமற்றவர்களாயிருப்போம்" என்று கூறினார். உண்மையில், 31 ஆம் வசனத்தில், தாவீது அப்னேருக்காக துக்கம் கொண்டாடும்படி இஸ்ரவேலர் அனைவருக்கும் கட்டளையிட்டார். இதன் விளைவாக, 37 வது வசனத்தில், "நேரின் குமாரனாகிய அப்னேரைக் கொன்றுபோடுவது ராஜாவின் சித்தமல்ல என்று சகல ஜனங்களும் இஸ்ரவேலர் அனைவரும் அந்நாளிலே அறிந்துகொண்டார்கள்."

இரண்டாவதாக, இஸ்போசேத்தின் மரணத்திலும் தாவீது குற்றமற்றவராக இருந்தார். இரண்டு பேர் இஸ்போசேத்தை படுக்கையில் கொலை செய்து, தாவீதிடம் தங்கள் செயல்களை பெருமையுடன் தெரிவித்தனர் என்று நமது ஆசிரியர் விளக்கினார். ஆனால் தாவீது இஸ்போசேத்தை நீதிமான் என்று சொல்லி கொலை செய்தவர்களை கொலை செய்வதன் மூலம் தான் குற்றமற்றவன் என்பதை நிரூபித்தார். மீண்டும், நமது ஆசிரியரின் வலியுறுத்தல் வெளிப்படையானது. தாவீது இந்த நேரத்தில் தேவனுடைய விசுவாசமான ஊழியராக இருந்ததால், சவுலின் ஆதரவாளர்கள் மற்றும் குடும்பத்தினரின் அணிகளிலிருந்தும் கூட வளர்ந்து வரும் ஆதரவுடன் தேவன் தாவீதை ஆசீர்வதித்தார்.

**முழு ஆதரவு (2 சாமுவேல் 5:1-5).** இது எபிரோனில் தாவீதின் ஆசீர்வாதங்களின் இரண்டாவது பகுதிக்கு நம்மைக் கொண்டுவருகிறது, 5:1-5இல் உள்ள அனைத்து இஸ்ரவேலர்களிடமிருந்தும் அவரது முழு ஆதரவு இருந்தது. இந்த வசனங்களில், இஸ்ரவேலின் அனைத்து கோத்திரங்களின் பிரதிநிதிகளும் எபிரோனில் கூடி, தாவீதை தங்கள் ராஜாவாக அபிஷேகம் செய்தனர். ஜனங்களுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பேன் என்று மனத்தாழ்மையுடன் உறுதிமொழி எடுத்துக்கொண்டதன் மூலம் தாவீது தேவனிடம் தன் உண்மைப் பற்றுறுதியை மறுபடியும் நிரூபித்தார். 5:3 இல், "தேவன் முன்னிலையில் தாவீது அவர்களோடு உடன்படிக்கை பண்ணினான்." இதன் விளைவாக, இஸ்ரவேலின் அனைத்து கோத்திரங்களிடமிருந்தும் உற்சாகமான ஆதரவுடன் தேவன் தாவீதை ஆசீர்வதித்தார்.

எபிரோனில் தாவீதின் முந்தைய ஆசீர்வாதங்களைப் பற்றிய பதிவுக்குப் பிறகு, நமது ஆசிரியர் 5:6–9:13 இல் எருசலேமில் தாவீதுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களுக்கு திரும்பினார். இந்த நீண்ட விவரப்பதிவுகளானது அறிக்கைகள், ஒரு பேச்சு மற்றும் ஒரு ஜெபம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது, இவை அனைத்தும் தாவீது எருசலேமில் தேவனுக்கு தொடர்ந்து

உண்மையுள்ளவனாக இருந்தபோது எவ்வாறு மேலும் மேலும் அதிக ஆசீர்வாதங்களைப் பெற்றார் என்பதை நிரூபிக்கின்றன.

## எருசலேமில் (2 சாமுவேல் 5:6–9:13)

எருசலேம் வேதாகம வரலாறு அனைத்தின் புவியியல் மையம் என்பதை வேதத்தை நன்கு அறிந்த அனைவருக்கும் தெரியும். ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை, பூமியில் தம்முடைய ராஜ்யம் எருசலேமுக்கு அருகாமையில் தொடங்கி அங்கிருந்து பூமியின் எல்லைகள் வரை பரவ வேண்டும் என்பதே தேவனுடைய திட்டமாக இருந்தது. தேவனுடைய ராஜ்யத்திற்கான இந்த நம்பிக்கையை தாவீதின் வீடு நிறைவேற்றும் என்று சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் உறுதியாக நம்பினார். எனவே, எருசலேமில் தேவன் தாவீதை எவ்வளவு ஆசீர்வதித்தார் என்பதை முன்னிலைப்படுத்த அவர் நேரம் எடுத்ததில் ஆச்சரியமில்லை.

**ஆரம்ப சாதனைகள் (2 சாமுவேல் 5:6–6:23).** எருசலேமில் தாவீதின் நேரத்தைப் பற்றிய கணக்கு மூன்று அத்தியாயங்களாகப் பிரிகிறது. இது 5:6–6:23 இல் தாவீதின் ஆரம்ப சாதனைகளுடன் தொடங்குகிறது. சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் தாவீதின் ஆரம்ப சாதனைகளை மூன்று படிகளில் அறிவித்தார். முதல் படியில், 5:6-16 இல், தாவீது எருசலேமில் எபூசிய கோட்டையை அச்சமின்றி வென்றதன் மூலம் தேவன் மீது இருந்த தனது விசுவாசத்தை நிரூபித்தார். இது வெறும் மனிதப் போர் அல்ல. தேவன் தாவீதை வெற்றியினால் ஆசீர்வதித்தார். ”சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவருடன் இருந்தார்” என்று நமது ஆசிரியர் 5:10 இல் விளக்கினார். ”கர்த்தர், சேனைகளின் தேவன்” என்ற சொற்றொடர் பரலோகத்தின் சேனைகளின் தலைவராக தேவனை நியமிக்கும் ஒரு தெய்வீக பட்டமாகும். எனவே, தேவன் தாவீதோடு இருந்தார் என்று சாமுவேலின் நூலாசிரியர் சொன்னபோது, தாவீது எருசலேமை ஜெயித்தபோது தேவனுடைய ஆசீர்வாதத்தையும் அவருடைய தேவதூத சேனைகளையும் பெற்றுக்கொண்டார் என்று அர்த்தப்படுத்தினார்.

எருசலேமில் தாவீது பெற்ற வெற்றி தேவனுடைய ஆசீர்வாதம் என்பதை சாமுவேலின் ஆசிரியர் உறுதிப்படுத்தினார், தேவனிடமிருந்து வந்த அதிக ஆசீர்வாதங்களைப் பற்றிய இரண்டு சுருக்கமான அறிக்கைகளைச் சேர்த்தார். முதல் அறிக்கையில், எருசலேமில் தாவீதின் கட்டிடத் திட்டங்களைப் பற்றி அவர் குறிப்பிட்டார். தாவீது அந்த நகரத்தைப் பலப்படுத்தினார். தீருவின் ராஜாவான ஈராம் கேதுரு மரங்களையும், தச்சர்களையும், கொத்தனார்களையும் அனுப்பினார். அவர்கள் தாவீதுக்கு ஒரு அரண்மனையைக் கட்டினார்கள். இரண்டாவது அறிக்கையில், 5:13 இல், தேவன் தாவீதை அதிக பிள்ளைகளால் ஆசீர்வதித்தார் என்று நமது ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த ஆசீர்வாதங்கள் தாவீதின் நிமித்தம் மட்டுமல்ல. தாவீது இஸ்ரவேலின் ராஜாவாக இருந்ததால் அவர்கள் முழு தேசத்தின் நன்மைக்காக இருந்தனர். 12



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆம் வசனத்தின்படி, "கர்த்தர் தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக ஏற்படுத்தினார் என்றும், தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தம்முடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்றும் தாவீது அறிந்திருந்தார்."

தாவீதின் ஆரம்ப சாதனைகளின் இரண்டாவது படியில், 5:17-25 இல், சாமுவேலின் ஆசிரியர் எருசலேமைப் பாதுகாப்பதில் தாவீதின் வெற்றியை விளக்கினார். இரண்டு முறை பெலிஸ்தர்கள் எருசலேமை மிரட்டினார்கள். ஆனால், இரண்டு போர்களிலும் தாவீது தேவன்மீது தன் பக்தியைக் காட்டினார். 19,23 வசனங்களில், அவர் செயல்படுவதற்கு முன்பு "கர்த்தரிடம் விசாரித்தார்", அவர் உடனடியாக தேவன் கட்டளையிட்டதற்குக் கீழ்ப்படிந்தார். இதன் விளைவாக, தேவன் தாவீதை பெரிய வெற்றிகளால் ஆசீர்வதித்தார். முதல் போருக்குப் பிறகு, ஏலியின் நாட்களில் பெலிஸ்தர்கள் தேவனுடைய பெட்டியை எடுத்ததைப் போலவே இஸ்ரவேலர்கள் பெலிஸ்திய சிலைகளை கைப்பற்றினர். இரண்டாவது போருக்குப் பிறகு, தாவீது பெலிஸ்தரை எருசலேமிலிருந்து வடக்கிலும் கிழக்கிலும் வெகு தூரம் விரட்ட முடிந்தது.

தாவீதின் ஆரம்ப சாதனைகளின் மூன்றாவது படியில், 6:1-23 இல், சாமுவேலின் ஆசிரியர் எருசலேமைப் பாதுகாப்பதில் தாவீது எவ்வாறு வெற்றி பெற்றார் என்பதை விளக்கினார். தாவீது தேவனுடைய பெட்டியை நகரத்திற்குள் கொண்டு வந்த நன்கு அறியப்பட்ட கதையை இங்கே காண்கிறோம். பெட்டியானது 20 ஆண்டுகளாக பாலே-யூதா என்று அழைக்கப்பட்ட கீரியாத்யாரீமில் இருந்தது என்பதை முந்தைய பாடத்திலிருந்து நீங்கள் நினைவுபடுத்திக் கொள்வீர்கள். ஆனால் இந்தச் சமயத்தில், தாவீது தன் தலைநகருக்குள் பெட்டியைக் கொண்டுவர ஒரு பெரிய ஊர்வலத்தை ஏற்பாடு செய்வதன் மூலம் தேவன்மீது தனக்குள்ள பக்தியை நிரூபித்துக் காட்டினார்.

எருசலேமின் பாதுகாப்புக்கு தேவனை உண்மையாக ஆராதனை செய்தல் முக்கியமானது என்பதை தாவீதின் ஊர்வலத்தின் ஆரம்பம் உடனடியாக சுட்டிக்காட்டுகிறது. தாவீதின் ஊர்வலம் ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களை உள்ளடக்கிய ஒரு ஆராதனை செயல் மட்டுமல்ல, 6:1 இல் நாம் வாசிக்கிறபடி, தாவீது ஒரு பெரிய மற்றும் உயரடுக்கு இராணுவ சேனையையும் திரட்டினார். மேலும், 6:2 இல், சாமுவேலின் ஆசிரியர் தாவீதின் இராணுவ இலக்கை சுட்டிக்காட்டிக் குறிப்பிடும்போது "சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே அழைக்கப்படுகிற தேவனுடைய பெட்டி" என்றார். நாம் இப்போது குறிப்பிட்டபடி, "சேனைகளின் கர்த்தர்" என்ற தெய்வீக பட்டம் பரலோகத்தின் சேனைகளின் தலைவராக தேவனை மகிமைப்படுத்தியது. எதிரிகளிடமிருந்து எருசலேமைப் பாதுகாக்க ஒரே வழி, தனது தலைநகரை இஸ்ரவேலினுடைய ஆராதனை மையமாக மாற்றுவதுதான் என்பதை தாவீது புரிந்துகொண்டார்.

ஊர்வலம் முன்னேறியபோது, எதிர்பாராத தாமதம் ஏற்பட்டது. லேவியனாகிய ஊசா பெட்டியைத் தொட்டான், தேவன் அவனைக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொன்றுபோட்டார். பரிசுத்தப் பெட்டி சம்பந்தமாக மோசேயின் நியாயப்பிரமாணத்தை லேவியர்கள் அவமதித்ததை நாம் உணரும்வரை தேவனுடைய பிரதிபலிப்பு தீவிரமானதாக தோன்றலாம். 6:3 இன் படி, பெலிஸ்தர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு பெட்டியை இஸ்ரவேலர்களிடம் திருப்பிக் கொடுத்ததைப் போலவே அவர்கள் "தேவனுடைய பெட்டியை ஒரு புதிய வண்டியில் கொண்டு சென்றனர்." யாத்திராகமம் 25:12-14 மற்றும் எண்ணாகமம் 7:9 ஆகிய வசனங்களில் மோசே விதித்திருந்தபடி லேவியர்கள் பெட்டியை கம்பங்களில் சுமக்கவில்லை. இதற்கும் மேலாக, இந்த பரிசுத்த ஊர்வலத்தில் ஊசா பெட்டியைத் தொட்டபோது, எண்ணாகமம் 4:15 இல் இந்த மீறலுக்காக தேவன் வெளிப்படையாக அறிவித்த மரண தண்டனையைப் பெற்றார்.

இந்த துயர சம்பவத்திற்கு வியாக்கியான அறிஞர்கள் பெரும்பாலும் தாவீதைக் குற்றம் சாட்டுகிறார்கள், ஆனால் சாமுவேலின் ஆசிரியர் வித்தியாசமான கவனத்தை வைத்திருந்தார். சாமுவேலின் இந்த பகுதியில், தாவீதின் விசுவாசத்திற்கு பதிலளிக்கும் விதமாக இந்த நேரத்தில் தேவன் எவ்வாறு இஸ்ரவேலை ஆசீர்வதித்தார் என்பதை நமது ஆசிரியர் தொடர்ந்து வலியுறுத்தினார் என்பதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். எனவே, இந்த காட்சியில் தாவீதின் உண்மையில்லாத தன்மையை அவர் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்க வாய்ப்பில்லை. மாறாக, லேவியர்கள்மீது பொறுப்பை சுமத்தினார். 1 சாமுவேல் 6:19 குறிப்பிடுவது போல, முன்பு பெத்ஷிமேசில் லேவியர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி பெட்டியைக் கையாளவில்லை. இத்தனை வருஷங்களுக்குப் பிறகு, மறுபடியும் தேவனுடைய பிரமாணத்தை அவர்கள் அசட்டை செய்தார்கள். ஒருவேளை, 30,000 க்கும் அதிகமான மக்கள் அடங்கிய இந்தப் பெரிய ஊர்வலத்தை தாவீது வழிநடத்திச் சென்றபோது, லேவியர்கள் செய்தவற்றில் அவர் கவனம் செலுத்தியிருக்க மாட்டார்.

ஆயினும், 6:8 இல், ஊசாவுக்கு எதிராக தேவனின் நியாயத்தீர்ப்பு வந்தபோது, "கர்த்தர் ஊசாவுக்கு எதிராக செய்ததால்" ஒருவேளை லேவியர்கள் மீது "தாவீது கோபமடைந்தார்" என்று சொல்லலாம். 9 வது வசனத்தின்படி, "அந்த கர்த்தருக்கு" "தாவீது பயந்தான்." பெட்டியை ஒபேத்ஏதோமின் வீட்டுக்கு மூன்று மாதங்களுக்கு அனுப்பியதன் மூலம் லேவியர்களின் பாவங்களை அவர் தயக்கமின்றி புரிந்து கொண்டார்.

ஒபேத்ஏதோமின் குடும்பத்தாரை தேவன் ஆசீர்வதித்திருக்கிறார் என்று தாவீது கேள்விப்பட்டபோது, மறுபடியும் ஊர்வலத்தை ஆரம்பித்தார். 6:13 இன் படி, இந்த முறை லேவியர்கள் "கர்த்தருடைய பெட்டியை" "சுமந்தனர்." இங்கே நமது ஆசிரியர் நாசா (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (נָשָׂא) என்ற எபிரெய வார்த்தையைப் பயன்படுத்தினார். தேவன் கட்டளையிட்டபடி, கம்பங்கள் மூலம் பெட்டியை உயர்த்துவதற்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தோன்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அதே சொல் இதுவாகும் இதற்கும் மேலாக, நமது ஆசிரியர் 13 வது வசனத்தில், ”பெட்டியைச் சுமந்தவர்கள் … ஆறடி தூரம் சென்றதும், தாவீது ஒரு மாட்டையும் கொழுத்த மிருகத்தையும் பலியிட்டான்” கூறுகிறார். 14,15 வசனங்களில், ஊர்வலம் கூச்சலிட்டு, எக்காளங்களை ஊதி, நடனமாடியபடி மகிழ்ச்சியுடன் தொடர்ந்தது என்று வாசிக்கிறோம். தேவனுடைய பெட்டி இறுதியாக எருசலேமை அடைந்தபோது, தாவீது சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்துவதன் மூலம் தேவனுக்கு தன் நன்றியைத் தெரிவித்தார். பெட்டி வழங்கிய இராணுவ பாதுகாப்பை மீண்டும் வலியுறுத்த, நமது ஆசிரியர் 18 வது வசனத்தில் ”[தாவீது] சேனைகளின் கர்த்தரின் நாமத்தால் ஜனங்களை ஆசீர்வதித்தார்.” அவர் பரலோக சேனைகளின் கர்த்தர் ஆவார். தாவீதினுடைய தேவ பக்தியின் விளைவாக, தேவன் எருசலேமை அவரது எதிரிகளுக்கு எதிராக பாதுகாத்து தாவீதை ஆசீர்வதித்தார்.

தாவீதினுடைய தாழ்மையான தேவ பக்தியை எடுத்துக்காட்ட, சவுலின் மகளான மீகாள், கர்த்தருக்கு முன்பாக நடனமாடும்போது தாழ்மையான ஆசாரியத்துவ ஏபோத்தை அணிந்ததற்காக தாவீதை அவமானப்படுத்த முயன்ற ஒரு சுருக்கமான காட்சியையும் நமது ஆசிரியர் சேர்த்தார். ஆனால் தாவீது 21 வது வசனத்தில் பதிலளிப்பதன் மூலம் தனது அரசாட்சியில் தேவனுடைய ஆசீர்வாதம் இருப்பதை புரிந்து கொண்டு, ”உம்முடைய தகப்பனைப் பார்க்கிலும் அவருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலும் என்னை இஸ்ரவேலாகிய ஜனத்தின் மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்கு தெரிந்துக்கொண்ட கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாக ஆடிபாடினேன் ” என்று கூறுகிறார். மீகாளைப் போல் இல்லாமல், தாவீது தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாக நடந்துகொண்டார்; தன் ராஜரீக நகரத்தின் பாதுகாப்புக்காக முழு இருதயத்தோடு நன்றியோடு இருந்தார்.

**வம்சத்தை நிறுவுதல் (2 சாமுவேல் 7:1-29).** தாவீதின் ஆரம்ப சாதனைகளை விவரித்த பிறகு, எருசலேமில் அவரது காலத்தின் இரண்டாவது பெரிய அத்தியாயத்திற்கு வருகிறோம்: 7:1-29 இல் தாவீதினுடைய வம்சம் ஸ்தாபிக்கப்படுதல். தாவீது, தீர்க்கதரிசி நாத்தான் மற்றும் தேவனுக்கு இடையிலான தொடர்புகளை உள்ளடக்கிய இந்த நிகழ்வுகள் தேவன் தாவீதுக்கு அவரது எதிரிகளிடமிருந்து ஒய்வு கொடுத்த பிறகு நடந்தது.

இந்த பிரபலமான கதையில், தாவீது தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவதில்லை என்று தெரிந்துகொண்டார். நமது நவீன கண்ணோட்டத்தில், இது மிகவும் முக்கியமானதாகத் தெரியவில்லை. ஆனால், சாமுவேலின் புத்தகத்தை முதன்முதலில் பெற்ற பூர்வ இஸ்ரவேலருக்கு, தாவீது ஆலயத்தைக் கட்டவில்லை என்பது அவரைக் குறித்த கேள்விகளை எழுப்பியது. பழைய ஏற்பாட்டு காலங்களில், இஸ்ரவேலிலும் இஸ்ரவேலுக்கு வெளியேயும், எல்லா பெரிய ராஜாக்களும் தங்கள் தேவர்களுக்கு ஆலயங்களைக் கட்டினார்கள் என்று பரவலாக நம்பப்பட்டது. பண்டைய கிழக்கைச் சேர்ந்த அரச கல்வெட்டுகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆலயங்களைக் கட்டுவதை ஒரு பெரிய அரசாட்சியின் அடையாளமாக மீண்டும் மீண்டும் பட்டியலிட்டன. இந்த பிரச்சினையை சமாளிக்க, சாமுவேலின் ஆசிரியர் தாவீது தேவனுக்கு ஒரு வீட்டைக் கட்ட தயாராகவும் விருப்பத்துடனும் இருந்தார் என்று விளக்கினார். ஆனால் தாவீது அவ்வாறு செய்யவில்லை, ஏனென்றால் தேவன் முதலில் நிலையான வம்சமாக ஒரு வீட்டைக் கட்டுவதன் மூலம் தாவீதை உயர்த்த தீர்மானித்தார். தேவனுடைய கட்டளைகளுக்குத் தாழ்மையோடு கீழ்ப்படிந்து, தாவீது தன் குமாரன் தேவனுக்காக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு வழியைத் தயார்படுத்துவதில் தன்னை அர்ப்பணித்தார்.

தாவீதின் வம்சம் நிறுவப்பட்டதைப் பற்றிய விவரிப்பு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. 7:1-3 இல் உள்ள முதல் பகுதி, தாவீதுக்கும் தேவனுடைய தீர்க்கதரிசியாகிய நாத்தானுக்கும் இடையிலான ஒரு சுருக்கமான உரையாடலை முன்வைக்கிறது. தாவீது தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி தேவனை மகிமைப்படுத்த விரும்பினார். ஆனால் தாவீது தன் வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பு, நாத்தானிடம் அங்கீகாரம் பெற்றதன் மூலம் தேவனுக்குத் தன் உண்மைப் பற்றுறுதியைக் காட்டினார். பெரிய ராஜாக்கள் தங்கள் தேவர்களுக்கு ஆலயங்களைக் கட்டினார்கள் என்பதை தாவீதும் நாத்தானும் அறிந்திருந்தனர். எனவே, ”போய், உம்முடைய இருதயத்தில் உள்ளதையெல்லாம் செய்யும், கர்த்தர் உம்முடனே இருக்கிறாரே” என்று நாத்தான் இயல்பாகவே 3 வது வசனத்தில் பதிலளித்தார்.

ஆனால் அடுத்த பகுதியில், 4-16 வசனங்களில், அதே இரவில் தேவனுக்கும் நாத்தானுக்கும் இடையில் ஒரு எதிர்பாராத உரையாடல் இருப்பதைக் காண்கிறோம். இந்த உரையாடல் முழுவதும், தேவனுடைய வார்த்தைகள் பொதுவாக ”வீடு” என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையான பைட் (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (בַּיִת) இன் இரண்டு வெவ்வேறு அர்த்தங்களை ஈர்த்தன. முதலாவதாக, 5-7 வசனங்களில், தாவீது தனக்கு ஒரு ”ஆலயத்தைக்” கட்டக்கூடாது என்று தேவன் நாத்தானுக்கு வெளிப்படுத்தினார். மாறாக, 8-16 வசனங்களில், தாவீதுக்கு ஒரு ”வீட்டை” கட்டுவதன் மூலம் தாவீதை கனப்படுத்தப் போவதாக தேவன் அறிவித்தார். அதாவது ஒரு நிரந்தர ராஜ வம்சம் தாவீதுக்கு இருக்கும் என்றார். தாவீது அல்ல, தாவீதின் குமாரன் தான் ஆலயத்தைக் கட்டுவார் என்று தேவன் தொடர்ந்து விளக்கினார். தாவீதின் குமாரனிடமிருந்து வந்த ராஜ ”வீட்டை” தேவன் என்றென்றும் ஆதரிப்பார்.

> தாவீது தீர்க்கதரிசியான நாத்தானிடம் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட முன்வந்தபோது, நாத்தான் திரும்பி வந்து, “நீர் கர்த்தருக்கு ஒரு வீட்டைக் கட்டப் போவதில்லை; கர்த்தர் உமக்காக ஒரு வீட்டைக் கட்டப் போகிறார்” என்றார். ”வீடு” என்று அவர் கூறியதற்கு, வம்சம் என்று பொருள்; இது 2



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சாமுவேல் 7 இல் உள்ளது.தேவன் அவருக்கு ஒரு வீட்டைக் கட்டுவார், அவருடைய ராஜ்யத்தை என்றென்றும் நிலைநிறுத்துவார், அவருடைய சந்ததி தாவீதின் சிங்காசனத்தில் என்றென்றும் ஆட்சி செய்யும் என்ற தீர்க்கதரிசனம், அதைத் தொடர்ந்து வந்த மேசியா குறித்த தீர்க்கதரிசனங்களுக்கு அடித்தளமாக அமைந்தது. எனவே, வீழ்ச்சிக்குப் பிறகு தாவீதின் வம்சத்தைக் குறித்து தீர்க்கதரிசிகள் தாவீதினுடைய வம்சத்தின் மகிமையை தேவன் மீட்டெடுப்பார் என்ற நம்பிக்கையை எதிர்நோக்கினார்கள். தாவீதின் வம்சத்தின் வழியாக தேவன் ஒரு ராஜாவை எழுப்புவார் என்று கூறப்பட்டது.
>
> – Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

2 சாமுவேல் 7:14-15 இல், தேவன் நாத்தானிடம் இவ்வாறு சொன்னார்:

> நான் தாவீதுக்குத் தந்தையாய் இருப்பேன்; அவன் எனக்கு குமாரனாய் இருப்பான். அவன் அக்கிரமம் செய்யும்போது, நான் மனுஷரின் கோலினால் அவனைச் சிட்சிப்பேன் … ஆனாலும் நான் சவுலிடத்திலிருந்து எடுத்துக்கொண்டதுபோல, என் மாறாத அன்பு அவனைவிட்டு நீங்குவதில்லை (2 சாமுவேல் 7:14-15).

இப்போது, இந்த பகுதி எபிரெய மொழியில் பெரித் (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ள) (בְּרִית) "உடன்படிக்கை" என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை. இருப்பினும், 2 சாமுவேல் 23:1-7 மற்றும் சங்கீதம் 89, 132 போன்ற பகுதிகளில் தாவீதுடன் தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கையுடன் வெளிப்படையாக தொடர்புடைய அனைத்து கூறுகளும் இதில் உள்ளன.

தேவன் தாவீதின் அரச சந்ததியினரை இஸ்ரவேலின் நீடித்த வம்சமாக நிறுவியதன் மூலம் தாவீதுக்கு தெய்வீக தயாளத்தை வெளிப்படுத்தினார். வேதத்தில் உள்ள மற்ற எல்லா தெய்வீக உடன்படிக்கைகளையும் போலவே, தாவீதின் குமாரர்களிடமிருந்து முழு இருதயத்தோடு கீழ்ப்படிக்கிற நன்றியுள்ள விசுவாசத்தை தேவன் எதிர்பார்த்தார். கூடுதலாக, தாவீதும் அவரது சந்ததியும் கீழ்ப்படிந்தால் தேவனுடைய ஆசீர்வாதங்களின் விளைவுகளைப் பெறுவார்கள், ஆனால் அவருக்கு எதிராக கலகம் செய்தால் சாபங்களைப் பெறுவார்கள். குறிப்பாக, தேவன் மற்ற மனிதர்கள் மூலம் அவர்களுக்கு தீங்கு விளைவிப்பார். பிளவுபட்ட முடியாட்சி மற்றும் பாபிலோனிய நாடுகடத்தலின் போது தாவீதினுடைய வீட்டின் சிக்கலான வரலாறு, தேவன் எவ்வாறு இந்த சாபங்களை தாவீதின் வீட்டின் மீது கொண்டு வந்தார் என்பதை நிரூபித்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால், தாவீதின் குமாரர்கள் எவ்வளவுதான் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தாலும், தாவீது சவுலை நிராகரித்தது போல், தாவீதின் வம்சத்தையும் ஒருபோதும் முற்றிலுமாக நிராகரிக்க மாட்டார் என்று தேவன் வாக்குறுதி அளித்தார். 7:16 இல் தேவன் தாவீதிடம் இவ்வாறு கூறினார்:

> உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் எனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும் (2 சாமுவேல் 7:16).

2 சாமுவேல் 7 இல் தேவன் தாவீதுடன் செய்த உடன்படிக்கையானது சாமுவேலின் ஆசிரியர் தன்னுடைய நாளின் வாசகர்களுக்கு வழங்கிய இறையியல் கண்ணோட்டங்களுக்கு முக்கியமானது. தாவீதின் குடும்பத்தாரிடமிருந்து நன்றியுள்ள விசுவாசத்தை தேவன் எதிர்பார்த்தார், தாவீதும் அவருடைய அரச சந்ததியும் பாவம் செய்தபோது அவர் அவர்களைக் கண்டித்தார். ஆனால் இந்த ஒழுக்கம் எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும், தேவன் ஒருபோதும் தாவீதின் வீட்டுக்கு உரிய உரிமையை வேறு யாருக்கும் கொடுக்கமாட்டார். இந்த காரணத்திற்காக, எதிர்காலத்தில் ஒரு மகிமையான ராஜ்யத்திற்கான இஸ்ரவேலுக்கு இருந்த ஒரே நம்பிக்கை தாவீதின் வீட்டின் நீதியுள்ள ஆட்சியில் இருந்தது.

எருசலேமில் தாவீதின் வம்சத்தை நிறுவுவதில் மூன்றாவது பகுதி 7:17-29 இல் தாவீதுக்கும் நாதனுக்கும் இடையிலான இரண்டாவது தொடர்பை அறிவிக்கிறது. நாத்தான் தேவனுடைய வெளிப்படுத்துதலை தாவீதுக்கு அறிவித்தார், தாவீது ஜெபத்தில் தேவனுக்கு முன்பாக தலைவணங்குவதன் மூலம் தேவனிடம் தனக்கு இருந்த விசுவாசத்தின் ஆழத்தை வெளிக்காட்டினார். தன் வீட்டின் நிரந்தரமானது தனக்கும் இஸ்ரவேலுக்கும் ஆசீர்வாதமாக இருந்தது என்பதை தாவீதின் ஜெபம் நிரூபித்தது. இந்த ஆசீர்வாதம் பூமியில் உள்ள ஒவ்வொரு நாட்டின் எதிர்காலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் அவர் புரிந்து கொண்டார். “மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே!” என்று 19 ஆம் வசனத்தில் கூறினார்.

1 சாமுவேல் 2:10 இல், இஸ்ரவேல் ராஜாவின் பெலன் மற்றும் ஜெயத்தின் மூலம் தேவனுடைய ராஜ்யம் ஒரு நாள் உலகம் முழுவதற்கும் விரிவடையும் என்று அன்னாள் பாடியது உங்களுக்கு நினைவிருக்கும். தாவீதினுடைய வம்சம் ஸ்தாபிக்கப்பட்டது முழு உலகத்தின் நம்பிக்கையாக இருந்தது. இந்த காரணத்திற்காக, தாவீதுக்கு தேவனிடம் ஒரே ஒரு வேண்டுகோள் இருந்தது. ”இப்போதும் உமது அடியானுடைய வீடு என்றென்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி, அதை ஆசீர்வதித்தருளும்” என்று 2 சாமுவேல் 7:29 இல் அவர் ஜெபித்தார்.

**கூடுதலான சாதனைகள் (8:1–9:13).** எருசலேமில் தாவீதின் ஆரம்ப சாதனைகள் மற்றும் அவரது வம்சம் ஸ்தாபிக்கப்பட்டதில் தேவன் எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பதை அறிவித்த பிறகு, நமது ஆசிரியரின் கணக்கு 8:1–9:13

இல், தாவீதின் மேலதிக சாதனைகளில் தேவனுடைய ஆசீர்வாதங்களுடன் முடிவடைகிறது. தாவீதின் கூடுதலான சாதனைகளைப் பற்றிய பதிவு இரண்டு பகுதிகளாக பிரிகிறது. முதல் பகுதி, 8:1-14 இல், தாவீதின் கூடுதல் வெற்றிகளை சுருக்கமாக கூறுகிறது. இந்த வசனங்கள் எருசலேமிலிருந்து ஒவ்வொரு திசைக்கும் நம்மை அழைத்துச் செல்லும் பல அறிக்கைகளைக் கொண்டுள்ளன. மேற்கே பெலிஸ்தியர், கிழக்கே மோவாபியர், வடக்கே கலிலேயா கடலுக்கு அப்பாலுள்ள மக்கள், தெற்கே ஏதோமியர் ஆகியோரை தாவீது முறியடித்ததை அவை விவரிக்கின்றன. இந்தப் போர்களின் போது தேவனை ஆராதிப்பதில் தாவீதின் பக்தியை நமது ஆசிரியர் மீண்டும் எடுத்துக்காட்டினார். 11 ஆம் வசனத்தின்படி, தாவீது தன் சத்துருக்களிடமிருந்து கொள்ளையடித்தபோது, "அவன் கொண்டுவந்தவைகளை தாவீது ராஜா .... கொள்ளையிட்டதிலும் எடுத்து கர்த்தருக்கு நியமித்த பொன்னோடும் வெள்ளியோடும் கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணினான்."

தாவீதுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களின் மீது இன்னும் அதிக கவனத்தை ஈர்க்க, நமது ஆசிரியர் 6,14 வசனங்களில் "தாவீது சென்ற இடமெல்லாம் கர்த்தர் அவருக்கு வெற்றியைக் கொடுத்தார்" என்று குறிப்பிட்டார். 2, 6 மற்றும் 14 வசனங்களில், இந்த எதிரிகளில் பலர் தாவீதின் ஊழியர்களானபோது தேவன் தாவீதின் ஆட்சியை அதிகரித்தார் என்பதையும் அவர் குறிப்பிட்டார். மேலும் 2,7,8,11 ஆகிய வசனங்களின்படி, தேவன் தாவீதுக்கு மிகுந்த செல்வத்தை அருளினார்.

தாவீதினுடைய வெற்றிகளை சுருக்கமாகக் கூறிய பிறகு, நமது ஆசிரியர் தாவீதின் மேலதிக சாதனைகளின் இரண்டாம் பகுதிக்குத் திரும்பினார்: 8:15–9:13 இல் உள்ள அவரது ராஜ்யத்தின் நிர்வாகம். 8:15-18 இல் அரச அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான மோசேயின் கட்டளைகளை தாவீது எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை இந்த பகுதி முதலில் சுருக்கமாகக் கூறுகிறது. நமது ஆசிரியர் 15 ஆம் வசனத்தில் கூறியது போல், "தாவீது தனது எல்லா ஜனங்களுக்கும் நீதியையும் நியாயத்தையும் நிர்வகித்தார்."

தாவீது நீதியுடனும் நியாயத்துடனும் ஆட்சி செய்த விதத்தை விளக்க, மேவிபோசேத்தை தாவீது நடத்திய விதம் பற்றி நமது ஆசிரியர் 9:1-13 இல் எழுதினார். மேவிபோசேத் யோனத்தான் வம்சத்தில் வந்த சவுலின் பேரன் ஆவார். எனவே, தாவீது எப்ரோனில் ஆட்சி செய்தபோது சவுலின் ஆதரவாளர்கள் மீதும் சவுலின் குடும்பத்தார் மீதும் தாவீது காட்டிய கருணையை இந்த கதை நினைவுபடுத்துகிறது. 1 சாமுவேல் 20:42 இல் தாவீதும் யோனத்தானும் ஒருவருக்கொருவர் ஆணையிட்ட விசுவாச ஆணையையும் இது நமக்கு நினைவூட்டுகிறது. இந்த கதை தாவீது 9:1 இல் "யோனத்தானின் நிமித்தம் என்னால் தயவு பெறுவதற்கு, சவுலின் வீட்டாரில் இன்னும் எவனாவது மீந்திருக்கிறானா?" என்று கேட்பதன் மூலம் செயலைத் தொடங்குவதிலிருந்து தொடங்குகிறது. தாவீது இஸ்ரவேலின் ராஜாவாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மிகுந்த ”தயவை” அல்லது ”விசுவாசத்தை” காட்டினார். எபிரெய மொழியில் (חֶסֶד) கேசெட் (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) என அழைக்கப்படுகிறது. மேவிபோசேத் கடுமையாக ஊனமுற்றிருந்தான், அந்த நேரத்தில், ஊனமுற்றவர்கள் பெரும்பாலும் வெட்கக்கேடாக நடத்தப்பட்டனர். ஆனால் தாவீது மேவிபோசேத்தை தனது அரண்மனையில் மரியாதைக்குரிய நிலையில் வாழ கிருபையுடன் வரவேற்றதன் மூலம் தான் எப்படிப்பட்ட ராஜா என்பதை நிரூபித்துக் காட்டினார்.

தாவீதின் ஆரம்ப கால ஆசீர்வாதங்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை நாம் ஆராய்ந்தோம். இப்போது, இந்த அதிகாரங்களின் கிறிஸ்தவ பயன்பாட்டைக் குறித்து சில கருத்துக்களை நாம் கூற வேண்டும். தாவீதினுடைய ஆட்சியின் இந்தப் பகுதியில் தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள் இன்று நம் வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்துகின்றன?

# கிறிஸ்தவ பயன்பாடு

தாவீதின் தேவனுடைய ஆசீர்வாதங்களின் ஆரம்ப ஆண்டுகளில் நடந்த நிகழ்வுகளின் விவரங்களை நாம் ஆராயும்போது, இந்த அத்தியாயங்கள் நமக்கும் சிறிதும் சம்பந்தப்படவில்லை என்பதை உணர எளிதானது. மேலோட்டமாகப் பார்த்தால், தாவீதின் சூழ்நிலை இன்று நாம் அனுபவிக்கும் எதிலிருந்தும் மிகவும் வித்தியாசமாகத் தெரிகிறது. நம்மில் சிலரே எபிரோனில் வாழ்கிறோம்; நம்மில் சிலரே எருசலேமில் வாழ்கிறோம்; நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு காலகட்டத்தில் வாழ்கிறோம். இருப்பினும், பரிசுத்த ஆவியானவர் இந்த வேதவசனங்களை தேவனுடைய மக்களுக்கு காலங்காலமாக கற்பிக்க அருளினார். எனவே, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம் இந்த அதிகாரங்களிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?

எப்போதும் போல, நேரம் நம்மை அனுமதிப்பதை விட இந்த பகுதியின் கிறிஸ்தவ பயன்பாட்டின் மூலம் சிந்திக்க பல வழிகள் உள்ளன. ஆனால், நமது முந்தைய பாடத்தைப் போலவே, நமது ஆசிரியரின் இரண்டு வலியுறுத்தல்கள், தாவீதின் ஆரம்ப ஆண்டுகளின் ஆசீர்வாதங்களுக்கும் கிறிஸ்துவில் நமது வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பை இணைக்க நமக்கு உதவுகின்றன. முதலாவதாக, தேவனுடைய உடன்படிக்கைகளுக்கு நமது நூலாசிரியர் கொடுக்கிற முக்கியத்துவத்தையும், பின்னர் தேவனுடைய ராஜ்யத்தின் மீதான அவரது முக்கியத்துவத்தையும் நாம் பார்ப்போம். ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையுடன் ஆரம்பிக்கலாம்.

## தேவனுடைய உடன்படிக்கைகள்

நாம் பார்த்தபடி, இந்த அதிகாரங்கள் தாவீதின் வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில் தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியலின் மீது மீண்டும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மீண்டும் கவனத்தை ஈர்க்கின்றன. தேவன் தாவீதின் மூலமாக தாவீதுக்கும் இஸ்ரவேலுக்கும் தமது தயவைத் தொடர்ந்து காட்டினார். மேலும், தாவீதினுடைய ஆட்சியின் இந்தப் பகுதியில் நமது நூலாசிரியர் தாவீதை முன்மாதிரியாகக் கொண்டிருந்ததால், தேவன் மீது இருக்கிற விசுவாசத்தின் தராதரங்களை, முக்கியமாக ஆராதனைக்கும் அரசர்களின் ஆட்சிக்கும் மோசேயின் சட்டங்களை தாவீது எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை மட்டுமே அவர் அறிவித்தார். நம்முடைய புத்தகத்தின் இந்தப் பகுதியில் உள்ள எல்லாவற்றையும்விட மிகப்பெரிய ஆசீர்வாதம் தேவன் தாவீதுடன் செய்த உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கையில், தேவன் தாவீதுக்கு ஒரு நிலையான வம்சத்தை வாக்களித்தார்.

தாவீதுடன் தேவன் உடன்படிக்கையை ஏற்படுத்தின காலத்தில் வாழ்ந்தபோது தேவனுடனான அவர்களின் தொடர்புகளைப் பற்றிய நுண்ணறிவுகளை இந்த கூறுகள் அன்றைய வாசகர்களுக்கு வழங்கின. தாவீதின் வீட்டாருக்கும், அவர்களுடைய நாளில் வாழ்ந்த ஒவ்வொரு இஸ்ரவேலருக்கும் தேவன் காட்டிய தெய்வீக தயாள வகைகளை அவை வெளிப்படுத்தின. இஸ்ரவேலிடமும் இஸ்ரவேலின் அரசர்களிடமும் தேவன் எவ்வகையான விசுவாசத்தை எதிர்பார்த்தார் என்பதையும், அவர்கள் தேவனுக்கு உண்மையுள்ள சேவை செய்தால் வரப்போகிற ஆசீர்வாதங்களையும் இந்த உறுப்புகள் குறிப்பிட்டுக் காட்டின.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், புதிய ஏற்பாட்டு போதனைகளின் வெளிச்சத்தில் தாவீதின் வாழ்க்கையின் இந்த கட்டத்தில் தேவனுடைய உடன்படிக்கையின் இயக்கவியலைப் பயன்படுத்த கவனமாக இருக்க வேண்டும். முதலாவதாக, தாவீதினுடைய ஆசீர்வாதத்தின் ஆரம்ப ஆண்டுகள் கிறிஸ்துவில் இருக்கிற தேவனுடைய தயவை நோக்கி நம் இருதயங்களைத் திருப்ப வேண்டும். தேவன் மீது கிறிஸ்துவுக்கு இருந்த பரிபூரண உண்மைப் பற்றுறுதிக்காக நாம் அவரை கனப்படுத்தி, அவருடைய உண்மையின் காரணமாக பிதாவிடமிருந்து கிறிஸ்து பெற்ற நித்திய ஆசீர்வாதங்களை புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இரண்டாவதாக, ஆராதனைக்கான தாவீதின் உண்மையுள்ள பக்தியும், நீதி மற்றும் நீதியின் ஆட்சியும் கிறிஸ்துவில் தேவனுடனான உடன்படிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளை சுட்டிக்காட்டுகின்றன. தாவீது தனது உண்மையின் காரணமாக பல ஆசீர்வாதங்களைப் பெற்றார். தேவனுடைய ஞானத்தின்படி, நம்முடைய உண்மையுள்ள சேவைக்காக பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்குள் நம்மை ஆசீர்வதிப்பார் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

தாவீதின் வாழ்க்கையின் இந்தப் பகுதியில் தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியல் எவ்வாறு வெளிப்பட்டது என்பதில் கவனம் செலுத்துவது மதிப்புமிக்கதாய் இருப்பதைப்போல, இந்த அதிகாரங்களின் நமது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்தவ பயன்பாடு கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தின் மீது நமது கவனத்தை ஈர்க்க வேண்டும்.

## தேவனுடைய ராஜ்யம்

> நாம் பழைய ஏற்பாட்டை பார்க்கும் பொழுது, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்து குறைந்தது இரண்டு மடங்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஒருபுறம், பழைய ஏற்பாடு தேவன் எப்போதும் ராஜாவாக இருந்திருக்கிறார் என்று போதிக்கிறது. அவர் நித்திய ராஜா என்பது இதன் அர்த்தமாகும். அவர் கடந்த காலத்தில் ராஜாவாக இருந்தார், அவர் நிகழ்காலத்திலும் ராஜா, அவர் எப்போதும் ராஜாவாக இருப்பார். ஆனால் மற்றொரு அர்த்தத்தில், பழைய ஏற்பாட்டில் நாம் கொண்டிருக்கும் மற்றொரு வலியுறுத்தல், தேவன் ஒரு நாள் பூமியை ஆள வருவார் என்ற செய்தியாகும். தேவன் உலகத்தைப் படைத்தபோது, அவர் மனதில் ஒரு நோக்கம் இருந்தது என்ற உண்மையே அதற்குக் காரணமாகும். இந்த உலகமே தனது அரண்மனையாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் தனது பரலோக ராஜ்யத்தை பூமிக்கு கொண்டு வர விரும்பினார்... இயேசுவுக்கும் அதே போதனைதான் இருந்தது. ”எங்கள் பிதாவே” என்று அவர் கற்பித்த ஜெபத்தில் அவர் நமக்கு இவ்வாறு சொல்கிறார்: ”பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உமது ராஜ்யம் வருவதாக” என்றார். ”எங்களை உம்முடைய ராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளும்” என்று அவர் சொல்லவில்லை, ஆனால் ”உம்முடைய ராஜ்யம் வருவதாக” என்கிறார். அப்படியென்றால், நம்முடைய கர்த்தராகிய இயேசு தம்முடைய ஊழியத்தில் தம்முடைய பிதாவைப் போலவே அதே முன்னுரிமையைக் கொண்டிருந்தார், அதாவது தம்முடைய பரலோக ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவருவது அவரது முன்னுரிமையாக இருந்தது. இந்த நீண்ட வரலாற்று நிகழ்ச்சிப்போக்கு அதன் இறுதிக் கட்டத்தை துல்லியமாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் காண்கிறது.
>
> – Dr. டேவிட் கொர்ரியா, மொழிபெயர்ப்பு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சாமுவேலின் புத்தகத்தின் இந்த பகுதியில், தேவன் தாவீதின் மூலமாக பல முக்கியமான வழிகளில் தம்முடைய ராஜ்யத்தை முன்னேற்றினார்:

- இஸ்ரவேல் மக்கள் அனைவரும் தாவீதின் ஆட்சியின் கீழ் ஒன்றானார்கள்;
- தாவீது தேவனுடைய எதிரிகளை தோற்கடித்து, எருசலேமை பூமியில் தேவனுடைய ராஜ்யத்தின் தலைநகராக நிறுவினார்;
- தாவீது சவுலின் ராஜ்யத்திற்கு அப்பால் தேவனுடைய ஆட்சியின் எல்லைகளை விரிவுபடுத்தினார், அவ்வாறு செய்வதன் மூலம், அதிகமான புறஜாதியாரை தேவனுடைய ராஜ்யத்தில் இணைத்தார்;
- தாவீது நீதியோடும் நேர்மையோடும் ஆட்சி செய்தார்; மற்றும்
- இஸ்ரவேல் ஒரு நம்பிக்கைக்குரிய, நிரந்தர அரச வம்சத்தின் ஸ்திரத்தன்மையைப் பெற்றது.

சாமுவேலின் ஆசிரியர் தேவனுடைய ராஜ்யத்தின் இந்த முன்னேற்றங்களை தனது அசல் வாசகர்களுக்கு தாவீதின் வீட்டின் நீதியான ஆட்சியின் மூலம் எதிர்காலத்தில் தேவன் இன்னும் பெரிய காரியங்களை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையைக் கொடுத்தார்.

இந்த வழிகளில், தேவனுடைய ராஜ்யத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் புதிய ஏற்பாட்டு இயேசுவை தாவீதின் பரிபூரண நீதியுள்ள குமாரனாக சுட்டிக்காட்டுகிறது, அவர் தாவீதின் சாதனைகளை அவற்றின் முழுமைக்கு கொண்டு வருவார். ஆயினும்கூட, இந்தத் தொடர் முழுவதும் நாம் குறிப்பிட்டுள்ளபடி, கிறிஸ்து இந்த பாத்திரத்தை மூன்று நிலைகளில் நிறைவேற்றுகிறார்; அவையாவன:அவரது முதல் வருகையின் போது அவரது ராஜ்யத்தின் தொடக்கத்தில்; திருச்சபை வரலாறு முழுவதும் அவரது ராஜ்யத்தின் தொடர்ச்சியில்; அவர் மகிமையோடே திரும்பி வரும்போது அவருடைய ராஜ்யத்தின் முடிவில்.

இந்த காரணத்திற்காக, தாவீதின் ஆரம்ப ஆண்டுகளில் அவருக்கு கிடைத்த ஆசீர்வாதங்களின் கதைகள் இயேசு தம்முடைய ராஜ்யத்தின் தொடக்கத்தில் நிறைவேற்றிய பெரிய காரியங்களை நோக்கி நம் இருதயங்களைத் திருப்ப வேண்டும். தாவீது தேவனுடைய மக்களை ஒன்றாக்கியதால், இஸ்ரவேலின் வடக்கிலும் தெற்கிலும் இருந்த உண்மையுள்ள மீதியானோரை இயேசு தம்முடைய ஆட்சியின் கீழ் ஒன்றுபடுத்தினார். தாவீது தனது எதிரிகளை தோற்கடித்ததால், இயேசு தனது மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் ஆகியவற்றில் தீமையை உறுதியாக தோற்கடித்தார். தாவீது எருசலேமில் ஆட்சி செய்தபோது, இயேசு தாவீதின் நகரத்தில் தனது மிகப்பெரிய வேலையைச் செய்து, பரலோகத்தில் தாவீதின் சிங்காசனத்தில் தனது சரியான இடத்தைப் பிடித்தார். கூடுதலாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுடைய ராஜ்யத்தின் எல்லைகளை தாவீதின் ராஜ்யத்திற்கு அப்பால் விரிவாக்கும்படி இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டார். இந்த விரிவாக்கத்தின் மூலம் அநேக புறஜாதியார் தம்மில் விசுவாசம் வைக்க இயேசு வழியைத் திறந்தார். தாவீதின் கடைசி பெரிய குமாரனாக, இயேசு பரிபூரண நீதி மற்றும் நேர்மையின் தனது நித்திய ஆட்சியைத் தொடங்கினார்.

இதையும் தாண்டி, கிறிஸ்து எவ்வாறு தாவீதின் ராஜ்யத்தின் தொடர்ச்சியில் செய்த சாதனைகளை முறியடித்தார் என்பதை சிந்திக்க இந்த அதிகாரங்கள் நம்மை அழைக்கின்றன. திருச்சபையின் வரலாறு முழுவதும், இயேசு மேலும் மேலும் மக்களை தம்மிடம் ஈர்த்துள்ளார். தம்முடைய சத்துருக்கள்மீது நியாயத்தீர்ப்புகளையும், அவரை நம்புகிற யாவர்மேலும் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களையும் தொடர்ந்து ஊற்றுகிறார். இரண்டாயிரத்துக்கும் அதிகமான வருஷங்களாக, இயேசு தேவனுடைய அரசாங்கத்தை மேன்மேலும் விரிவுபடுத்தியிருக்கிறார். உலகெங்கிலும் உள்ள தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு இணையற்ற நீதியுடனும் நியாயத்துடனும் அவர் ஆட்சி செய்கிறார்.

கடைசியாக, தாவீதின் சாதனைகள் அசல் வாசகர்களை எதிர்காலத்தை நோக்கித் திருப்பியதால், அவை இப்போது காலத்தின் நிறைவில் கிறிஸ்து என்ன சாதிப்பார் என்பதை நோக்கி நம் இருதயங்களைத் திருப்புகின்றன. கிறிஸ்து திரும்பி வரும்போது, தம்முடைய மக்கள் அனைவரையும் தம்முடைய நீதியான ஆட்சியின் கீழ் ஒன்றுபடுத்துவார். அவர் தேவனுடைய ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான எதிரிகள் அனைவரையும் முற்றிலும் முறியடித்து, தம்முடைய ராஜ்யத்தில் இருப்பவர்கள் மீது நித்திய ஆசீர்வாதங்களை ஊற்றுவார். தேவனுடைய ராஜ்யத்தின் எல்லைகள் விரிவடைந்து முழு உலகத்தையும் நிரப்புகையில், புதிய எருசலேம் புதிய சிருஷ்டிப்பின் மையப்புள்ளியாக இறங்கி வரும். இயேசு உலகம் முழுவதும் உலகளாவிய நீதி மற்றும் சமத்துவத்துடன் என்றென்றும் ஆட்சி செய்வார்.

எனவே, புதிய ஏற்பாட்டின் போதனைகளை நாம் பின்பற்றும்போது, தாவீதின் ஆரம்ப ஆண்டுகளில் நமக்கு ஆசீர்வாதங்களின் பொருத்தத்தை நாம் காணலாம். கிறிஸ்து தனது முதல் வருகையில் தேவனுடைய ராஜ்யத்திற்காக என்ன சாதிக்கப் போகிறார் என்ற பெரிய அதிசயங்களை இந்த ஆண்டுகள் எதிர்பார்த்தன. நம்முடைய காலத்திலும் கிறிஸ்து தொடர்ந்து என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை அவை நமக்கு இன்னும் முழுமையாக உணர்த்துகின்றன. அவர் மகிமையில் திரும்பி வரும்போது அவர் என்ன செய்யப்போகிறார் என்பதை ஆவலோடு எதிர்நோக்கியிருக்க அவை நமக்கு உதவுகின்றன.

இதுவரை, சாமுவேலின் ஆசிரியர் தாவீது ராஜாவின் ஆட்சியைப் பற்றிய தனது விவரத்தை தாவீதின் ஆரம்ப ஆண்டுகளில் தேவனிடமிருந்து வியக்கத்தக்க ஆசீர்வாதங்களுடன் எவ்வாறு தொடங்கினார் என்பதை நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பார்த்தோம். இப்போது, 2 சாமுவேல் 10-20 இல் தேவனிடமிருந்து தாவீது பெற்ற சாபங்களின் பிற்கால ஆண்டுகளுக்குத் திரும்புவோம்.

# பிற்கால சாபங்கள்

2 சாமுவேல் 7 இல் தேவன் தாவீதுடன் உடன்படிக்கை செய்தபோது, தாவீதையும் அவரது குடும்பத்தினரையும் சவுலை நடத்தியதை விட வித்தியாசமாக நடத்துவதாக வாக்குறுதி அளித்தார். இறுதியில், தேவன் சவுலையும் அவரது சந்ததியினரையும் இஸ்ரவேலின் சிங்காசனத்திலிருந்து முற்றிலும் நிராகரித்தார் என்பதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். ஆனால் தாவீதுடன் செய்த உடன்படிக்கையில், இஸ்ரவேலின் நிரந்தர வம்சமாக இருந்த தாவீது தன் குடும்பத்தை ஒருபோதும் முற்றிலுமாக நிராகரிக்க மாட்டார் என்று தேவன் அவருக்கு உறுதியளித்தார். இருப்பினும், சவுலுடன் செய்ததைப் போலவே, தாவீதும் அவருடைய சந்ததியும் உடன்படிக்கையை மீறினால் சாபங்களால் அவர்களை சிட்சிப்பதாக தேவன் சத்தியம் செய்தார்.

நமது புத்தகத்தின் இந்த கட்டத்தில், சாமுவேலின் ஆசிரியர் தாவீதும் அவரது அரச சந்ததியும் சில பயங்கரமான வழிகளில் தேவனுடைய சாபங்களின் கீழ் எவ்வாறு விழுந்தார்கள் என்பதில் கவனம் செலுத்தினார். இந்த வகையான தொல்லைகள் அன்றைய வாசகர்களின் நாட்களிலும் தொடர்ந்தன. ஆனால், தேவன் தாவீதைச் சபித்தபோதிலும், அவரையும் அவருடைய அரச வம்சாவளியையும் பாதுகாத்தார் என்பதையும் சாமுவேலின் நூலாசிரியர் சுட்டிக்காட்டினார். தாவீதினுடைய வம்சத்தின் மூலமாகவே தேவன் தம்முடைய ராஜ்யத்தை அதன் மகிமையான உலகளாவிய இலக்கை நோக்கி முன்னேற்றுவிப்பார்.

தாவீதின் பிற்கால ஆண்டுகளில் தேவனிடமிருந்து வந்த சாபங்களை நமது வழக்கமான வழியில் பார்ப்போம். இந்த அத்தியாயங்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை ஆராய்வதன் மூலம் இந்த அத்தியாயங்களின் அசல் அர்த்தத்தை முதலில் ஆராய்வோம். பின்னர் நாம் அவைகளின் கிறிஸ்தவ பயன்பாட்டைப் பற்றிப் பார்ப்போம். தாவீதுக்கு தேவன் தந்த பிற்கால சாபங்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துடன் ஆரம்பிக்கலாம்.

## அமைப்பும் உள்ளடக்கமும்

நமது புத்தகத்தின் இந்த பகுதியை நோக்கி ஒரு நோக்குநிலையை வழங்க, நாம் பார்க்கப்போவதைப் பற்றிய முன்னோட்டத்தை வழங்க வேண்டும். மறுபடியும், தேவனுடைய ராஜ்யம் மற்றும் அவருடைய உடன்படிக்கைகளைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பற்றிய நமது ஆசிரியரின் கண்ணோட்டங்கள் இந்த அதிகாரங்களுக்கு ஆதாரமாக உள்ளன. ஆனால் இங்கே, சாமுவேலின் புத்தகத்தில் நாம் முன்பு பார்த்திராத வழிகளில் நமது ஆசிரியர் இரண்டு கருப்பொருள்களையும் கையாண்டார்.

ஒருபட்சத்தில், தாவீதினுடைய ஆட்சியின் இந்த ஆண்டுகளில் தேவனுடைய ராஜ்யம் கடுமையான பின்னடைவுகளை சந்தித்ததை சாமுவேலினுடைய புத்தகத்தின் ஆசிரியர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். தாவீதின் ஆரம்ப ஆண்டுகளில் திடீரென அடுத்தடுத்து மகத்தான சாதனைகள் செய்வது நிறுத்தப்பட்டது, மேலும் ஒரு தொந்தரவான காலம் வந்தது. ஆனால் இந்த பின்னடைவுகள் இருந்தபோதிலும், தாவீதினுடைய வீட்டின் மூலம் தேவனுடைய ராஜ்யம் முடிவுக்கு வரவில்லை என்பதை விளக்குவதில் நம் ஆசிரியர் கவனமாக இருந்தார். மாறாக, தாவீதையும் அவருடைய குடும்பத்தையும் இஸ்ரவேலின் நிரந்தர வம்சமாக தேவன் எவ்வாறு இரக்கத்துடன் ஆதரித்தார் என்பதை அவர் குறிப்பிட்டார்.

மறுபுறம், இந்த அதிகாரங்களில் தாவீதினுடைய ராஜ்யத்தின் கலவையான நிலைமைகள் தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியலின் விளைவாக விளைந்தன என்பதையும் நாம் காணப்போகிறோம். முந்தைய அதிகாரங்களைப் போலவே, தெய்வீக தயாளம் தம்முடைய மக்களுடனான தேவனுடைய தொடர்புகளின் ஒவ்வொரு அம்சத்தையும் தொடர்ந்து வகைப்படுத்தியது. மேலும், மோசேயின் நியாயப்பிரமாண தராதரங்களின்படி நன்றியுள்ள விசுவாசத்தையும் தேவன் தொடர்ந்து எதிர்பார்த்தார். ஆனால் தாவீதும் அவருடைய குடும்பத்தாரும் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தராதரங்களை அப்பட்டமாக மீறினார்கள் என்பதை இந்த அதிகாரங்கள் வெளிப்படுத்துகின்றன. இதன் விளைவாக, தேவனுடைய சாபங்கள் தாவீதின் மீதும் அவருடைய வீட்டார் மீதும் மட்டுமல்ல, இஸ்ரவேல் தேசம் முழுவதின் மீதும் விழுந்தன. அப்படியிருந்தும், சாமுவேலினுடைய புத்தகத்தின் ஆசிரியர் வெறுமனே தேவனுடைய சாபங்களை அறிவிக்கவில்லை. தாவீது தன் பாவங்களிலிருந்து மனத்தாழ்மையுடன் மனந்திரும்பினார் என்பதையும், அவருடைய ராஜ்யத்தை ஆதரிப்பதன் மூலம் தேவன் அவரை இரக்கத்துடன் ஆசீர்வதித்தார் என்பதையும் அவர் விளக்கினார்.

> தாவீது ராஜா அதிகாரத்திற்கு வந்தபோது, அபிஷேகம் செய்யப்பட்ட மற்றும் கர்த்தரை நேசித்த ஒரு இளைஞனாக வந்தார், அவர் சங்கீதங்கள் மற்றும் பிற காரியங்களின் மூலமாக அதை வெளிப்படுத்தினார். வெளியே நின்ற விஷயங்களில் ஒன்று, அவர் உண்மையில் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதனாக இருந்தார். அதில் அவர் தொடர்ந்து வளரும்போது, சவுல் தனது அபிஷேகத்திற்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எதிர்ப்புத் தெரிவித்ததாலும், அதனுடன் அவரது வாழ்நாள் முழுவதும் நடந்த அனைத்து விஷயங்களாலும் சோதிக்கப்பட்டார், மேலும் அவர் உண்மையுள்ளவராக இருந்தார். 2 சாமுவேல் புத்தகத்தில், அவர் ராஜாவாக நிறுவப்படும்போது, மீண்டும், அவர் கர்த்தருக்கு உண்மையுள்ளவராகவும் விசுவாசமுள்ளவராகவும் இருக்கிறார், ஆனால் அவர் சில நேரங்களில் கர்த்தர் என்ன செய்ய கொடுத்திருக்கிறார் என்பதிலும், கர்த்தருக்கு முன்பாக உண்மையானவராக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதிலும் கவனம் செலுத்துவதில்லை... விஷயங்கள் சீரழிந்தன; இப்போது, பிறகு கர்த்தருக்கு உண்மையுள்ளவராக மாறி, கர்த்தரிடம் திரும்பிச் சென்றார். ஆனால், தாவீதின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் ஒரு காரியம் என்னவென்றால், தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதன் கூட மிக மோசமான பாவச் செயல்களைச் செய்ய முடியும் என்பதாகும். விழாதபடி நாம் கவனமாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் வைக்க வேண்டும்.
>
> — Dr. ரிச்சர்ட் ஈ. ஏவர்பெக்

தாவீதின் பிற்கால சாபங்களின் கட்டமைப்பும் உள்ளடக்கமும் இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவதாக, 10:1–12:31 இல் தாவீதினுடைய ராஜ்ஜியத்தின் ஆரம்ப பிரச்சனைகளை ஆராய்வோம். இரண்டாவதாக, 13:1–20:26 இல் தாவீதினுடைய ராஜ்ஜியத்திற்கு வந்த நீட்டிக்கப்பட்ட பிரச்சனைகளை சிந்திப்போம். இந்த ஆண்டுகளில் தாவீதின் ஆரம்ப பிரச்சனைகளைப் பற்றிய நமது ஆசிரியரின் பதிவுக்கு முதலில் திரும்புவோம்.

## ஆரம்ப பிரச்சனைகள் (2 சாமுவேல் 10:1–12:31)

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் தாவீதின் ஆரம்ப பிரச்சனைகளை பத்சேபாளுடன் தாவீது செய்த பாவத்தின் கதையாக சுருக்கமாகக் கூறுவது பொதுவானது. நமது ஆசிரியர் 11:2–12:25 இல் தாவீதையும் பத்சேபாளையும் நேரடியாகக் கையாண்டார். ஆனால் இங்கே நமது ஆசிரியரின் நோக்கங்களைப் புரிந்துகொள்ள, அம்மோனியர் தலைமையிலான கலகத்தின் மீது தாவீதின் வெற்றியைப் பற்றிய ஒரு பெரிய கதையின் கட்டமைப்பிற்குள் தாவீது மற்றும் பத்சேபாளைப் பற்றிய தனது விவரத்தை அவர் உட்பொதித்துள்ளார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**ஆரம்ப வெற்றி (2 சாமுவேல் 10:1–11:1).** இந்த பெரிய, பரந்த விவரிப்பின் முதல் பகுதி 10:1–11:1 இல் அம்மோனியர் தலைமையிலான கலகத்தின் மீது தாவீதின் ஆரம்ப வெற்றியுடன் தோன்றுகிறது. இந்த நேரத்தில் தாவீதுக்கு அடிபணிந்திருந்த அம்மோனியரின் ராஜா இறந்துவிட்டார் என்ற செய்திக்கு தாவீது தந்த கனிவான பதிலுடன் இந்த கணக்கு தொடங்குகிறது. ஆனூனின் தகப்பனாகிய நாகாஸ் [இறந்த ராஜாவின்] எனக்கு தயவு செய்தது போல அவன் குமாரனாகிய இவனுக்கு தயை செய்வேன் " என்று 10:2 இல் தாவீது கூறினார். தாவீதின் நீதியான மற்றும் சமத்துவமான நிர்வாகத்திற்கு மற்றொரு உதாரணத்தை இங்கே காண்கிறோம். ஆனால், தாவீதின் தயவை வரவேற்பதற்குப் பதிலாக, அம்மோனியர் தாவீதின் தூதர்களை வேவுகாரர்கள் என்று பொய்யாக குற்றம் சாட்டி அவர்களை அவமானப்படுத்தி தாவீதிடம் திருப்பி அனுப்பினர்.

இப்போது, அம்மோனியர் தாவீதுக்கு அடிபணிந்ததை மீறியதை அறிந்தனர், எனவே அவர்கள் இஸ்ரவேலுக்கு எதிராக போர் செய்ய ஏராளமான சிரியர்களுடன் ஒரு கூட்டணியை உருவாக்கினர். தாவீதின் தளபதியான யோவாப் இந்தக் கூட்டணியை முறியடித்தார். சீரியர்கள் தாவீதிடம் சரணடைந்தனர். அம்மோனியர் தங்கள் அரண்சூழ் நகரமான ரபாவுக்கு ஒடிப்போனார்கள். வசந்த காலம் வந்தபோது, தாவீது எருசலேமில் தங்கியிருக்கையில் அம்மோனிய நகரமாகிய ரப்பாவை முற்றுகையிட யோவாபை தாவீது அனுப்பினார் என்ற அறிவிப்புடன் தாவீதின் ஆரம்ப வெற்றி முடிவடைந்தது.

**இறுதி வெற்றி (2 சாமுவேல் 12:26-31).** சாமுவேலின் ஆசிரியர் 12:26-31 இல் அம்மோனிய கிளர்ச்சிக்கு எதிரான தாவீதின் இறுதி வெற்றியைத் திருப்புவதன் மூலம் இந்த பெரிய கதை கட்டமைப்பை நிறைவு செய்தார். சில காலத்திற்குப்பின், யோவாப் அரச அரண்மனையான ரப்பாவைக் கைப்பற்றி அந்நகரைக் கைப்பற்றத் தயாரானான். தாவீது தனக்கான வெற்றியை சரியாக உரிமை கொண்டாட அவர் தாவீதை தன்னுடன் சேர அழைத்தார். தாவீதும் யோவாபும் அம்மோனியரைத் தோற்கடித்தனர். பின்பு தாவீதும் அவனது படைவீரர்களும் வெற்றியோடு எருசலேமுக்குத் திரும்பினர்.

இந்த பெரிய கதை கட்டமைப்பு மிகவும் தடையின்றி ஒன்றிணைகிறது, நமது ஆசிரியர் ஏற்கனவே உள்ள எழுத்து மூலங்களில் ஒன்றிலிருந்து அதை எடுத்திருக்கலாம். ஆனால் தாவீது மற்றும் பத்சேபாளின் கதையை அதன் நடுவில் சொருகுவதன் மூலம் அவர் இந்த நேர்மறையான வெற்றி கதையை மாற்றினார். 11:2-12:25 இல் உள்ள இந்த உட்பொதிக்கப்பட்ட விவரிப்பு ஒரு முக்கியமான உண்மையை அறிமுகப்படுத்துகிறது. இந்த நேரத்தில் அம்மோனியர்கள் மீது தேவன் தாவீதுக்கு வெற்றியைக் கொடுத்தாலும், தாவீதின் பாவத்தின் காரணமாக தாவீதுக்கும் அவரது வீட்டாருக்கும் எதிராக சாபங்களைக் கொண்டு வந்தார், மேலும் தாவீதின் ராஜ்யம் ஒன்றன்பின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒன்றாக பின்னடைவை சந்திக்கத் தொடங்கியது. இருப்பினும், இந்த விவரிப்பு வெளிப்படுத்துகிறபடி, தாவீது உள்ளப்பூர்வமாக மனந்திரும்பியதன் பிரதிபலிப்பாக தேவன் தொடர்ந்து தாவீதின் வம்சத்தை ஆதரித்தார்.

**தாவீதும் பத்சேபாளும் (2 சாமுவேல் 11:2–12:25).** இந்த பழக்கமான கதை மூன்று அத்தியாயங்களாக உடைகிறது. முதல் அத்தியாயம் 11:2-27 இல் தாவீதின் பாவத்துடன் தொடங்குகிறது. இது 11:1 இல் உள்ள அறிவிப்பைப் பின்பற்றுகிறது, சவுல் நமது புத்தகத்தில் முன்பு பல சந்தர்ப்பங்களில் செய்ததைப் போலவே, தாவீது அவருக்காக மற்றவர்களை போருக்கு அனுப்பினார். போரிலிருந்து பாதுகாப்பாக இருந்தபோது, தாவீதின் படையில் உண்மையுள்ள போர்வீரனான ஏத்தியனான உரியாவின் மனைவியான பத்சேபாளை தாவீது வேவு பார்த்தார். இந்தக் கதை முழுவதும், பத்சேபாள் செயலற்றவளாகவும் கீழ்ப்படிபவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள். இருப்பினும், தாவீது தனது அரச அதிகாரத்தை வேண்டுமென்றே மீண்டும் மீண்டும் துஷ்பிரயோகம் செய்வதாகக் காட்டப்படுகிறது. முதலில், அவர் பத்சேபாளைத் தம்மிடம் வரும்படி கட்டளையிட்டார், அவர் அவளோடே சயனித்தார். பின்னர், பத்சேபாள் கர்ப்பமாக இருப்பதை அறிந்தபோது, தாவீது தனது பாவத்தை மறைக்கும் முயற்சியில் போரிலிருந்து திரும்பி வருமாறு உரியாவுக்கு கட்டளையிட்டார். இந்த சூழ்ச்சி பலிக்காதபோது, தாவீது போரில் உரியாவின் மரணத்தை உறுதிப்படுத்த யோவாபுக்கு கட்டளையிட்டார்.

இப்போது, அந்நாளில் மற்ற தேசங்களின் கலாச்சார விதிமுறைகளின்படி, தாவீது செய்தது ராஜாவாக அவரது உரிமைகளுக்கு உட்பட்டது. அதோடு, உரியாவின் மரணத்துக்குப் பிறகு பத்சேபாளை வழக்கமான துக்கத்தில் ஆழ்த்துவதன் மூலம் தாவீது பாரம்பரியத்தின் சரியான தராதரங்களைக் காத்துக்கொண்டார். அதன் பின்னரே அவளைத் தன் மனைவியாக அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

சாமுவேலின் ஆரம்பகால வாசகர் தாவீது செய்த காரியத்தை ஒரு ராஜா ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தையாக மன்னிக்கலாம். ஆனால் தாவீதின் செயல்களைப் பற்றி தேவன் இப்படி உணரவில்லை என்பதை நமது ஆசிரியர் தெளிவுபடுத்தினார். தாவீது செய்ததைக் குறைப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் எதிர்க்க, சாமுவேலின் ஆசிரியர் இந்த அத்தியாயத்தை 11:27 இல் ஒரு முக்கியமான கருத்துடன் முடித்தார். "தாவீது செய்த காரியம் கர்த்தருக்குப் பொல்லாததாயிருந்தது" என்று அவர் எழுதினார்.

> பத்சேபாளுடன் தாவீது செய்த பாவம் உண்மையில் தாவீதின் கதை தொங்கும் கீலாகும். அதற்கு முன் ராஜ்யம் உண்டாவதைக் காண்கிறீர்கள்; இதற்குப் பிறகு ஒரு குடும்பம் அழிந்து போவதை நீங்கள் காண்கிறீர்கள். இது மிகவும் சோகமாக இருப்பதற்கான காரணம், முதலாவதாக, தாவீது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அரசாட்சியைப் பற்றிய தனது புரிதலின் அடிப்படையில் நழுவுகிறார். பண்டைய உலகில், ஒரு ராஜா முழுமையானவராக இருந்தார். எனவே, அவன் தன் அண்டை வீட்டுக்காரியின் மனைவியை விரும்பினால், ”என்ன பெரிய விஷயம்?” என்று கூறி அவளை தூக்கிச் செல்வது வழக்கம். ”தேசத்தின் உண்மையான ராஜா என்ன விரும்புகிறாரோ அதைப் பொருட்படுத்தாமல் நான் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்” என்கிற புரிதலுக்குள் தாவீது மீண்டும் நழுவுகிறார். எனவே, அந்த புள்ளியில்தான் இந்த கதையின் உண்மையான புள்ளி தோன்றத் தொடங்குகிறது. ஆனால், நிச்சயமாக, அவர் பத்சேபாளை எடுத்துக்கொள்வது மட்டுமல்ல. இதை மூடிமறைக்க உரியாவை வீட்டிற்கு அழைத்து வருவதன் அடிப்படையில் அவர் அதை கூட்டுகிறார். இது மிகவும் சுவாரஸ்யமானது, நாம் பாவம் செய்யும்போது, நமது முதல் உள்ளுணர்வு அறிக்கையிட்டு மனந்திரும்பக்கூடாது என்பதாகும். அதை மூடி மறைக்க வேண்டும் என்பதுதான் நம் முதல் உள்ளுணர்வாகும். அதைத்தான் தாவீது செய்து கொண்டிருந்தார். பின்னர், நிச்சயமாக, உரியா தனது ராஜாவை விட அதிக மரியாதைக்குரியவராக மாறியபோது, அவர் தனது மனைவியுடன் இரவைக் கழிக்க வீட்டிற்குச் செல்ல மாட்டார், பின்னர் தாவீது அவரைக் கொல்ல முடிவு செய்கிறார். எனவே, தாவீது தனது அண்டை வீட்டாரின் மனைவியுடனும் தனது அண்டை வீட்டாருடனும் என்ன வேண்டுமானாலும் செய்யக்கூடிய ஒரு முழுமையான ராஜாவின் பங்கை வகிக்கும் இந்த முயற்சியை நாம் இங்கே காண்கிறோம், மேலும் தேவன் அப்படி ”செய்யக்கூடாது” என்று கூறுகிறார். அந்த பதிவைப் பற்றி எனக்குத் தோன்றும் விஷயங்களில் ஒன்று, கதையை சொல்பவரைப் பற்றியதாகும்: அவர் இதைச் செய்தார். அவர் இதைச் செய்தார். அவர் அதைச் செய்தார். பின்னர் அந்த கடைசி வாக்கியம் இவ்வாறு கூறுகிறது: ”தாவீது செய்தது கர்த்தருக்குப் பொல்லாததாயிருந்தது.” எல்லாவற்றிலும் பிரச்சனை இருக்கிறது. அதைத்தான் அவர் செய்திருக்கிறார். தேவனுடைய இடத்தை அபகரித்துக் கொண்டு, தனக்கு எது சரி, எது தவறு என்பதை அவரே தீர்மானிப்பார் என்று முடிவு செய்துள்ளார்.

– Dr. ஜான் ஆஸ்வால்ட்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தாவீது மற்றும் பத்சேபாளின் பதிவின் இரண்டாவது அத்தியாயத்தில், சாமுவேலின் ஆசிரியர் 12:1-14 இல் நாத்தானின் தீர்க்கதரிசன நியாயத்தீர்ப்புக்கு திரும்பினார். இங்கே அவர் தாவீதினுடைய குற்றத்தின் தீவிரத்தை தெளிவுபடுத்தினார். நாத்தானின் பேச்சின் உள்ளடக்கம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததால், சாமுவேலின் ஆசிரியர் அதை சற்று விவரமாக அறிவித்தார்.

நாத்தானின் பேச்சு 12:1-7 இல் உள்ள தீர்க்கதரிசன உவமையுடன் தொடங்கியது. இந்த உவமை பண்டைய சட்ட வழக்கின் ஒரு வடிவத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது என்று பல வியாக்கியான அறிஞர்கள் சரியாக கருத்து தெரிவித்துள்ளனர். இந்த உவமையில், நாத்தான் தாவீதுக்கு ஒரு கற்பனையான சட்ட வழக்கை வழங்கினார்: பல மந்தைகளையும் ஆடுகளையும் வைத்திருந்த ஒரு செல்வந்தர், ஒரு ஏழையின் ஒரேயொரு, அன்பான ஆட்டுக்குட்டியை அறுத்து விருந்தினருக்கு உணவளித்தார். இந்த அநீதியை நினைத்து தாவீது கோபமடைந்தார், அப்படிப்பட்ட மனிதன் மரணத்திற்கு தகுதியானவன் என்று வலியுறுத்தினார். ஏழை மீது இரக்கம் காட்டாததால் பணக்காரன் நான்கு மடங்கு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அவர் அறிவித்தார். அந்த நேரத்தில், 12:7 இன் முதல் பாதியில், நாத்தான் நேரடியாக தாவீதை நோக்கி "நீர் தான் அந்த மனிதன்!" என்றார்.

அவருடைய தீர்க்கதரிசன உவமையைப் பின்பற்றி, நாத்தான் தேவனுடைய பரலோக மன்றத்திலிருந்து பெற்ற வார்த்தைகளால் தாவீதை நோக்கி மேலும் பேசினார். 7-9 வசனத்தின் இரண்டாம் பகுதியிலிருந்து, தாவீது தேவனுடனான தனது உடன்படிக்கையை மீறினார் என்ற நாத்தானின் தீர்க்கதரிசன குற்றச்சாட்டை நாம் காண்கிறோம். தாவீதை இஸ்ரவேல் முழுவதன் மீதும் அரசனாக்குவதன் மூலம் தேவன் எவ்வாறு கருணையுள்ளவராக இருந்தார் என்பதை நாத்தான் மறுபரிசீலனை செய்தார். ஆனால் தாவீது தேவனுடைய தயவுக்கு நன்றியுணர்வுடன் பதிலளிக்கத் தவறிவிட்டார், அதற்கு பதிலாக, மோசேயின் பிரமாணத்தை மீறினார்.

பின்னர், 10-14 வசனங்களில் ஒரு தீர்க்கதரிசன தண்டனையை நாம் காண்கிறோம், அதில் நாத்தான் தாவீதின் விசுவாசமின்மையின் விளைவுகளை அறிவித்தார். தாவீதுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் இரண்டு விதமான சாபங்கள் வரும். 10 ஆம் வசனத்தில், தாவீதின் அரச குடும்பம் தொடர்ச்சியான வன்முறையால் கறைபடும் என்று நாத்தான் அறிவித்தார். 11 ஆம் வசனத்தில், தாவீதின் அரச குடும்பம் அவருக்கு எதிராக கலகம் செய்யும் என்று நாத்தான் அறிவித்தார்.

மணத்துணைக்குத் துரோகம் செய்வதன் மூலமும், சதித்திட்டம் தீட்டுவதன் மூலமும், உரியாவின் பாவத்தை மறைக்க அவனது மரணத்திற்கு ஏற்பாடு செய்வதன் மூலமும் தாவீது மோசேயின் சட்டத்தை மீறினார் என்பது நிச்சயமாகவே உண்மைதான். ஆனால் இந்தப் பாவங்கள் தாவீதின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விஷயத்தில் படுமோசமாக இருந்தன, ஏனென்றால் அவை அவருடைய ராஜ அதிகாரத்தை அப்பட்டமாக துஷ்பிரயோகம் செய்தன. நாம் முந்தின பாடத்தில் பார்த்தபடி, சவுல் ராஜாவின் நியாயத்தீர்ப்பின் கீழ் வந்தார், ஏனென்றால் அவர் ராஜ அதிகாரத்தின் மீது மோசேயின் கட்டுப்பாடுகளை மீறினார். தாவீதின் செயல்களும் தேவனுக்கு அருவருப்பாக இருந்தன என்பதை நாத்தானின் தீர்க்கதரிசனம் வெளிப்படுத்தியது.

இந்த சாபங்கள் எவ்வளவு துயரமானவையாக இருந்தபோதிலும், தாவீதையும் அவரது அரச வம்சாவளியையும் தேவன் ஏன் முற்றிலுமாக நிராகரிக்கவில்லை என்பதை சாமுவேலின் ஆசிரியர் உடனடியாக சுட்டிக்காட்டினார். சாமுவேல் அவரை எதிர்கொண்டபோது சாக்குப்போக்குகளைச் சொல்லி, மனந்திரும்புவது போல் பாசாங்கு செய்த சவுலைப் போலல்லாமல், தாவீது உடனடியாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார், தேவன் இரக்கத்துடன் பதிலளித்தார். 2 சாமுவேல் 12:13-14 இதை இவ்வாறு குறிப்பிடுகிறது:

> தாவீது நாத்தானை நோக்கி, ”நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்” என்றான். நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்க செய்தார்; ஆகிலும் இந்தக் கிரியையினாலே சத்துருக்குள் தேவனை தூஷிக்க இடம்கொடுத்த படியினால், உனக்குப் பிறந்த பிள்ளை சாவான்” என்றார் (2 சாமுவேல் 12:13-14).

தாவீது தன்னைத் தாழ்த்திக் கொண்டான். இதன் விளைவாக, நாத்தான் இரக்கமுள்ள நியாயத்தீர்ப்பின் ஒரு வார்த்தையால் பதிலளித்தார். அவர் தாவீதை நோக்கி: நீர் சாவதில்லை என்றான். ஆனால் தாவீது ”கர்த்தரை முற்றிலும் அவமதித்ததால்” சிட்சை சாபங்கள் இன்னும் வரும். நாத்தான் 14 ஆம் வசனத்தில் ”உனக்குப் பிறக்கும் பிள்ளை சாகும்” என்று கூறியது போல் நடக்கும்.

தாவீது மற்றும் பத்சேபாளின் கதையின் மூன்றாவது மற்றும் இறுதி அத்தியாயம், 12:15-25 இல் நாத்தானின் வார்த்தைகளின் உடனடி நிறைவேற்றத்தை நமக்குக் காட்டுகிறது. இந்த அத்தியாயத்தில் பத்சேபாளுக்கு தாவீதிடம் பிறந்த மகன் உண்மையில் இறந்தான் என்று நாம் அறிகிறோம். ஆனால் தாவீது தொடர்ந்து தேவனுக்கு முன்பாக உள்ளப்பூர்வமான மனந்திரும்புதலைக் காட்டினார். தன் குமாரன் இறப்பதற்கு முன்பு, தேவன் மனந்திரும்பி அவனை மரிக்க அனுமதிக்கக்கூடாது என்ற நம்பிக்கையில் தாவீது தன் பிள்ளைக்காக ஊக்கமாக ஜெபித்தார். ஆனால் பிள்ளை இறந்தவுடன், தாவீது தாழ்மையுடன் தேவனுடைய நியாயத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதன் விளைவாக, சாமுவேலின் ஆசிரியர் இந்த விவரப்பதிவை 24,25 வசனங்களில் ஒரு சுருக்கமான விவரிப்புடன் முடித்தார், அதில் பத்சேபாள் இரண்டாவது குமாரனைப் பெற்றெடுத்தாள். இந்த நிகழ்வு தாவீதின் மனந்திரும்புதலின் காரணமாக தேவன் காட்டிய இரக்கத்தின் நுட்பமான ஆனால் ஆச்சரியமான நினைவூட்டலாக இருந்தது. தாவீதின் இரண்டாவது மகன் வேறு யாருமல்ல, சாலொமோன்.

சாமுவேலின் ஆரம்பகால வாசகர் சாமுவேல் இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யத்தை பெரிதும் விரிவுபடுத்தினார் என்பதை அறிந்திருந்தனர். அவர் எருசலேமில் ஆலயத்தைக் கட்டினார், ராஜ்யத்தை புதிய நாடுகளுக்கு விரிவுபடுத்தினார், இஸ்ரவேலுக்கு முன்னெப்போதும் இல்லாத செல்வத்தையும் அதிகாரத்தையும் கொண்டு வந்தார். எதிர்காலத்தில் இஸ்ரவேலை ஆட்சி செய்த தாவீதின் ஒவ்வொரு அரச குமாரனுக்கும் சாலொமோன் மூதாதையானார். ஆனால் சாலொமோன் பத்சேபாளின் குமாரன் என்ற உண்மை ஆரம்ப வாசகரில் குறைந்தபட்சம் சிலரின் மனதில் ஒரு வினைமையான கேள்வியை எழுப்பியது. பத்சேபாளின் குமாரன் மூலம் இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யம் எவ்வாறு தொடரும்?

நமது ஆசிரியர் இந்த கேள்விக்கு 24 வது வசனத்தில் "கர்த்தர் அவரை நேசித்தார்" என்று பதிலளித்தார். 25 வது வசனத்தின்படி, தேவன் தீர்க்கதரிசி நாத்தான் மூலம் வார்த்தையை அனுப்பினார், அவர் "யெதிதியா என்று அழைத்தார்", அதாவது "யெகோவாவின் பிரியமானவர்" என்று அதற்கு பொருள். தாவீதின் வீட்டுக்கு வந்த எல்லா பிரச்சனைகளின் மத்தியிலும், எதிர்கால ஆசீர்வாதங்களைப் பற்றிய இஸ்ரவேலரின் நம்பிக்கை சாலொமோனின் அரச வம்சத்தில் வந்த தாவீதின் சந்ததியாரின் மீதே தங்கியிருந்தது.

தாவீதின் ஆரம்ப பிரச்சனைகளைத் தொடர்ந்து, சாமுவேலின் ஆசிரியர் 13:1-20:26 இல் தாவீதின் ராஜ்யத்திற்கு வந்த நீட்டிக்கப்பட்ட பிரச்சனைகளுக்கு திரும்பினார்.

## நீடித்த தொல்லைகள் (2 சாமுவேல் 13:1–20:26)

இந்த அத்தியாயங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, அவற்றின் முக்கிய கதாபாத்திரங்களை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். நிச்சயமாகவே, தாவீதும் யோவாபும் ஒரு முக்கிய பங்கை வகித்தனர். ஆனால் இந்த அதிகாரங்கள் தாவீதின் குமாரர்களைப் பற்றியும் கவனம் செலுத்துகின்றன. 2 சாமுவேல் 3:2,3 தாவீதின் முதல் மூன்று குமாரர்கள் அம்னோன், கிலேயாப் மற்றும் அப்சலோம் என்று கூறுகிறது. தாவீதின் மூத்த குமாரனாக, அம்னோன் தாவீதின் சிங்காசனத்தின் வெளிப்படையான வாரிசாக இருந்தார். தாவீதின் இரண்டாவது மகன் கிலேயாபைப் பற்றி வேதவசனங்கள் எதுவும் சொல்லவில்லை. அவர் இளம் வயதிலேயே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இறந்திருக்கலாம். இதன் விளைவாக, தாவீதின் மூன்றாவது குமாரனான அப்சலோம் அம்னோனுக்கு அடுத்தபடியாக சிங்காசனத்திற்கு இரண்டாவது வரிசையில் ஆனான். இந்த அதிகாரங்களில், தாவீதின் சிங்காசனத்தின் முதல் மற்றும் இரண்டாம் சுதந்தரவாளிகள் சம்பந்தமாக நாத்தானின் நியாயத்தீர்ப்பைப் பற்றிய தீர்க்கதரிசனம் எவ்வாறு நிறைவேறியது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்.

தாவீதின் நீட்டிக்கப்பட்ட பிரச்சனைகளைப் பற்றிய இந்தப் பதிவு ஐந்து முக்கிய படிகளாகப் பிரிக்கப்படுகிறது. முதலில் மேடையை அமைத்த பிறகு, நமது ஆசிரியர் ஒவ்வொரு அடுத்தடுத்த படியையும் ஒரு தற்காலிக குறியீட்டுடன் அறிமுகப்படுத்தினார், இது கடந்து சென்ற ஆண்டுகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

**அம்னோன் தாமாரை கற்பழித்தல் (2 சாமுவேல் 13:1-22).** தாவீதின் நீட்டிக்கப்பட்ட தொல்லைகளின் முதல் படி, 13:1-22இல் அம்னோன் தன் ஒன்றுவிட்ட சகோதரியாகிய தாமாரை கற்பழித்த அதிர்ச்சியூட்டும் கதையை விவரிக்கிறது. இந்த அத்தியாயம் தாவீதின் முதற்பேறான குமாரனான அப்சலோமின் சகோதரியான தாமார் மீது காமத்தால் எரிக்கப்படுவதிலிருந்து தொடங்குகிறது. தாமார் தன் படுக்கையறையில் தன்னிடம் தனியாக வரும்படி அம்னோன் தாவீதை ஏமாற்றினான். பின்னர் அவன் அவள்மீது தன்னை பலவந்தப்படுத்தினார், பின்னர் கடுமையாக அவளை நிராகரித்தான். இந்த நிகழ்வின் உணர்ச்சிகரமான தாக்கங்கள் தாவீதின் வீட்டிற்கு அது கொண்டு வந்த நெருக்கடியை பிரதிபலிக்கின்றன. "தாமார் தனித்துக் கிலேசப்பட்டுக்கொண்டிருந்தாள்" என்று 13:20 இல் நாம் வாசிக்கிறோம். "தாவீது ராஜா … இந்த செய்திகளையெல்லாம் கேட்ட போது கோபமா இருந்தார்" என்று வசனம் 21 நமக்கு சொல்கிறது. அம்னோன் தன் சகோதரியாகிய தாமாரைக் கொடுமைப்படுத்தினபடியால், அப்சலோம் அவனைப் பகைத்தான்" என்று 22 ஆம் வசனம் தெரிவிக்கிறது.

**அப்சலோமின் பழிவாங்கலும் தப்பியோடுதலும் (2 சாமுவேல் 13:23-37).** தாவீதின் நீட்டிக்கப்பட்ட தொல்லைகளின் இரண்டாவது படி தாமார் கற்பழிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறுகிறது. இது அப்சலோமின் பழிவாங்குதல் மற்றும் தப்பியோடியதை 13:23-37 இல் விவரிக்கிறது. அப்சலோம் தாவீதை வஞ்சகமாக வற்புறுத்தி, அம்னோனையும் அவனுடைய மற்ற சகோதரர்களையும் எருசலேமிலிருந்து ஆடுகளை மேய்க்க தன்னுடன் வர அனுமதித்தான். அங்கே இருந்தபோது, அப்சலோமின் ஊழியக்காரர் அம்னோனைக் கொலை செய்தனர், அப்சலோம் தன் உயிருக்கு பயந்து ஓடிப்போனான். இந்த நேரத்தில் தாவீதுக்கு எவ்வளவு பயங்கரமான நிலைமைகள் இருந்தன என்பதைக் குறிக்க, "ராஜாவும் … அவருடைய ஊழியக்காரரெல்லாரும் மிகவும் மனங்கசந்து அழுதார்கள்… தாவீது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாள்தோறும் தன் மகனுக்காக துக்கம் அனுசரித்தான்" என்று 13:36,37 அறிக்கையிடுகிறது.

**அப்சலோம் திரும்பி வருதல் (2 சாமுவேல் 13:38–14:27).** தாவீதின் நீட்டிக்கப்பட்ட தொல்லைகளின் மூன்றாவது படி அப்சலோம் எருசலேமுக்குத் திரும்புவதை மையமாகக் கொண்டுள்ளது, 13:38–14:27. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, தாவீதின் துக்கம் குறைந்து, அவர் அப்சலோமைக் காண வாஞ்சையாயிருந்தார். தாவீதின் விருப்பத்தை அறிந்த யோவாப், அப்சலோமை எருசலேமுக்குத் திரும்ப அனுமதிக்கும்படி தாவீதை ஏமாற்றினான். யோவாப் ஒரு "புத்திசாலி பெண்" அல்லது ஒரு "தந்திரமான பெண்" என்று மொழிபெயர்க்கப்படுகிற ஒருத்தியை தாவீதுக்கு முன் சென்று தனது சகோதரனைக் கொன்ற தனது மகனுக்கு பாதுகாப்பு தேடுவது போல் நடிக்க அழைத்தான். தாவீதின் அனுதாபத்தைப் பெற்ற பிறகு, தாவீதின் அரச நியாயத்தீர்ப்புகளில் அவர் தவறு செய்ய முடியாது என்று கூறி அவரைப் புகழ்ந்தாள். இந்தப் பொய்யால், அப்சலோம் திரும்பி வர அனுமதிக்கும்படி தாவீதை அவள் சம்மதிக்க வைத்தாள். அப்சலோம் எருசலேமுக்குத் திரும்பினான், ஆனால் அவன் ராஜா முன்னிலையில் நுழைய அனுமதிக்கப்படவில்லை. எனவே, அப்சலோமின் விரக்தி அதிகரித்தது. சுவாரஸ்யமாக, சாமுவேலின் ஆசிரியர் 14:25 இல் "இஸ்ரவேல் அனைவருக்குள்ளும் அப்சலோமைப் போன்ற சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை" என்று குறிப்பிடுவதன் மூலம் தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான முரண்பாட்டை வலியுறுத்தினார். ஒரு தலைமுறைக்கு முன்பு வாழ்ந்த சவுலைப் போலவே, அப்சலோமின் சிறந்த உடல் தோற்றம் இஸ்ரவேல் ராஜ்யத்தில் இன்னும் அதிக தொந்தரவுக்கு வழிநடத்துகிறதாக இருந்தது.

**எருசலேமில் அப்சலோமின் எழுச்சி (2 சாமுவேல் 14:28–15:6).** இது 14:28–15:6 இல் உள்ள நான்காவது படிக்கு நம்மைக் கொண்டுவருகிறது, அங்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு எருசலேமில் அப்சலோமின் எழுச்சியைப் பற்றி வாசிக்கிறோம். அப்சலோம் தாவீதின் சிங்காசனத்தின் வாரிசாக ஏற்றுக்கொள்ளப்பட ஆவலுடன் விரும்பினான். எனவே, அவன் இறுதியாக யோவாபை ராஜாவைப் பார்க்க அனுமதி பெற சம்மதிக்க வைத்தார். அப்சலோம் வந்தபோது, அவன் தாவீதுக்கு முன்பாகத் தாழ்மையைக் காட்டினான். பின்பு தாவீது முட்டாள்தனமாய் ஒப்புரவாகுதலை முன்வைத்து, முத்தமிட்டு, அப்சலோமை தனது உண்மையான வாரிசாக ஏற்றுக்கொண்டார். பிறகு, அப்சலோம் தனக்கு முன்னால் ஓட ஒரு தேரையும், குதிரைகளையும், ஐம்பது வீரர்களையும் வரவழைத்துக் கொண்டான். ஆனால் அவன் இன்னும் திருப்தி அடையவில்லை. தாவீதைக் காணக் காத்திருந்தவர்களின் மன்ற வழக்குகளில் அவர் நேர்மையற்ற முறையில் தலையிட்டார், மேலும் அவர்களுக்கு அநியாயமாக சலுகைகளை வழங்குவதன் மூலம் பல விசுவாசமான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சீஷர்களைப் பெற்றான். 15:6 இல் இந்த படியின் முடிவில் நாம் வாசிக்கிறபடி, ”அப்சலோம் இஸ்ரவேல் மனுஷரின் மனதுக்கு பிடித்தவனானான்.”

**அப்சலோமின் கலகம் மற்றும் தோல்வி (2 சாமுவேல் 15:7–20:26).** தாவீதின் நீட்டிக்கப்பட்ட பிரச்சனைகளின் கடைசி படி, அப்சலோமின் கிளர்ச்சி மற்றும் தோல்வியின் நீண்ட விவரம் 15:7–20:26. எருசலேமில் அப்சலோம் எழுச்சிப்பெற்ற நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அப்சலோம் மீண்டும் தாவீதை ஏமாற்றி, பொய்யான பாசாங்குகளின் கீழ், எருசலேமை விட்டு எபிரோனுக்கு செல்ல அனுமதி பெற்றான். அங்கே ஜனங்கள் அப்சலோமை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அறிவித்தார்கள்.

அப்சலோம் கலகம் செய்ததைக் கேள்விப்பட்டதும், தாவீது எருசலேமை விட்டு ஓடிப்போனார். எருசலேமிலிருந்த நிறைய பேர் தாவீதுக்கு உண்மையாக இருப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டு அவரோடு ஓடிப்போனார்கள். ஆனால் தாவீதின் நம்பகமான ஆலோசகரான அகித்தோப்பேல் உட்பட மற்றவர்கள் கலகத்தில் சேர்ந்துகொண்டனர். தன்னுடைய சீஷர்கள் சிலரை எருசலேமில் முக்கியமான பதவிகளில் அமர்த்த தாவீது ஞானமாக விட்டுவிட்டார். அவர்களில் அவருடைய நம்பிக்கைக்குரியவரான ஊசாய் உட்பட எல்லாரையும் நியமித்தார். ஆசாரியர்களாகிய சாதோக்கையும் அபியத்தாரையும் தேவனுடைய பெட்டியுடன் எருசலேமிலேயே இருக்கும்படி தாவீது கட்டளையிட்டார்.

தாவீது எருசலேமை விட்டு ஓடிப்போனபோது, மேவிபோசேத்தின் வேலைக்காரனான சீபாவும் அவனோடு சேர்ந்துகொண்டான். ஆனால் சவுலின் குடும்பத்தைச் சேர்ந்த பென்யமீனியனான சீமேயி, தாவீது எருசலேமை விட்டுப் புறப்படுகையில் அவரைக் கேலி செய்து சபித்தான். தாவீது தன் ஆட்கள் வற்புறுத்தியபடி சீமேயிக்கு எதிராக தாக்கவில்லை. அதற்கு பதிலாக, அவர் 16:11 இல் ”அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்ய கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்” என்று சொல்லி தேவனுக்கு முன்பாக தனது சொந்த நிலையை ஒப்புக்கொண்டார்.

இதற்கிடையில், அப்சலோம் எருசலேமுக்குள் நுழைந்து தாவீதின் சிங்காசனத்தை உரிமை கோரினான். அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பின்பற்றி, அப்சலோம் தாவீதின் மறுமனையாட்டிகளைத் தன்னிடம் அழைத்துக்கொண்டான். தாவீதை உடனடியாகத் தாக்கும்படி அகித்தோப்பேலும் அப்சலோமுக்கு அறிவுரை கூறினான். ஆனால் தாவீதின் உண்மையுள்ள ஆலோசகரான ஊசாய் அப்சலோமை ஏமாற்றி, அவனைத் தாக்குவதைத் தாமதப்படுத்தினான். தாவீதை எச்சரிக்க சாதோக்கும் அபியத்தாரும் தூதுவர்களை அனுப்பினார்கள். தாவீது தப்பித்து போருக்குத் தயாரானார்.

கடும் போருக்குப் பிறகு, தாவீதின் படை அப்சலோமின் படைகளை வென்றது. ஆனால், அப்சலோமிடம் மென்மையாக நடந்துகொள்ளும்படி தாவீது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கட்டளையிட்டிருந்தபோதிலும், யோவாப் தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பார்த்து அப்சலோமைக் கொன்றுபோட்டார். இங்கே, சாமுவேலின் எழுத்தாளர் தேவன் தாவீதின் ராஜ்யத்தை எவ்வாறு சபித்தார் என்பதை மீண்டும் வலியுறுத்தினார். தனது வெற்றியைக் கொண்டாடுவதற்குப் பதிலாக, தாவீது மனமுடைந்து 18:33 இல் "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே!" என்று சொல்லி கதறினார்.

> அப்சலோமைப் பற்றி நீங்கள் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. அவன் தெளிவான லட்சியம் கொண்டவனாக இருந்தான். மிகவும் இரக்கமற்ற ஒரு குமாரனாகவும் இருந்தான். அம்னோன் தன் ஒன்றுவிட்ட சகோதரியாகிய தாமாரை கற்பழித்தபோது, அதற்காக அப்சலோம் பழிவாங்கினான். அவன் ஒரு சூழ்ச்சியான வழியில் அவ்வாறு செய்து, தகுந்த நேரத்திற்காக காத்திருந்து அவனைக் கொன்றான். இங்கே தாவீதைக் குறித்த காரியத்திலும் அதையே செய்தான், தலைவர்களையும் மூப்பர்களையும் மற்ற செல்வாக்குள்ள ஆட்களையும் வாசல்களில் சந்தித்து, அவர்களிடம் தயவைப் பெற்று, தனது முக்கியத்துவத்தின் கருத்தை வைத்து புதிய அரசராக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முயல்கிறான். அந்த நேரத்தில், அப்சலோம் வெல்லப் போகிறான் என்பது போல் தெரிகிறது என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் எனக்கு ஒரு காரியம் இங்கே புரிகிறது. உண்மையில், சூழ்நிலை மாறுகிறது, தாவீதின் படைகள் வெற்றி பெறத் தொடங்குகின்றன, அவனது தலைமுடி ஒரு மரத்தில் சிக்கிக் கொள்கிறது, அவன் அங்கே தொங்குகிறான், பின்னர் அவன் தாவீதின் ஆட்களில் ஒருவனால் கொல்லப்படுகிறான். தாவீது அவனுக்காக அழுகிறான். அது அவர்களின் உறவின் தன்மையைப் பற்றி ஏதோ சொல்கிறது என்று நான் நினைக்கிறேன்... ஒரு வீட்டில் ஒரு மகனும் தந்தையும் எப்படி ஒன்றாக இருக்க முடியும், ஆனால் ஒருவருக்கொருவர் மிகவும் விலகி இறுதியில் எதிரிகளாக மாற முடியும் என்ற போராட்டத்தை இது காட்டுகிறது என்று நான் நினைக்கிறேன், இதை மிகவும் யதார்த்தமாக நினைக்கிறேன். ஆனாலும், ஒருபோதும் தாவீது அவனை எதிரியாக நினைக்கவில்லை. எனவே, அதிகாரத்திற்கு அவன் உயர்ந்தது ஒரு தவறான முடிவுக்கு வருகிறது, தாவீது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வெளியேற்றப்பட்டாலும், அப்சலோமுக்கு விசுவாசமாக இருக்கும் மக்களால் அவர் சபிக்கப்பட்டார், இருப்பினும் இந்த கடினமான நேரத்தில் கூட தேவன் தன்னைப் பார்க்கப் போகிறார் என்ற உணர்வு தாவீதுக்கு இருந்தது. இறுதியில் அப்சலோமுக்கு என்ன நடந்தது என்பதை நாம் நிச்சயமாக அறிவோம்.
>
> – Dr. ஆலிவர் எல். டிரிமியூ, ஜூனியர்.

அப்சலோமின் கலகம் தோற்கடிக்கப்பட்ட பிறகு, தாவீது இறுதியாக எருசலேமுக்குத் திரும்பினார். தாவீதினுடைய ராஜ்யத்தின் விளைவாக ஏற்பட்ட நிலைமையை சாமுவேலின் ஆசிரியர் பல வழிகளில் விளக்கினார். தேவனுடைய இரக்கத்தால், தாவீதின் ராஜ்யம் தொடர்ந்தது, ஆனால் தாவீது தன் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் குணாம்சப்படுத்திய மகத்தான ஆசீர்வாதங்களை ஒருபோதும் அனுபவிக்கவில்லை. யூதாவின் ஜனங்கள் அவரை ஆதரித்தனர். எருசலேமில் தங்கிவிட்ட பென்யமீனியர், சிமேயி, மேவிபோசேத் ஆகியோருடன் தாவீது சமாதானம் செய்து கொண்டார். கீலேயாத்தியரும் தாவீதை ஆதரித்தனர். ஆனால் யூதாவுக்கும் வட இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கும் இடையே தொடர்ந்து பிரச்சனை இருந்தது. பென்யமீனியனான சேபாவின் படுமோசமான கலகத்தை தாவீது முறியடிக்க வேண்டியிருந்தது.

இறுதியில், தேவன் தாவீதையும் அவனுடைய வீட்டையும் ஆதரித்து ஆசீர்வதித்தார். ஆனால் தாவீதின் பாவம் தேவனுடைய சாபங்களின் கீழ் அவருடைய ராஜ்யத்தை வழிநடத்தியது என்பதை சாமுவேலின் ஆசிரியர் தெளிவுபடுத்தினார். இஸ்ரவேலை ஆளுவதற்கு தாவீதைவிட அதிக நீதியுள்ளவரான தாவீதின் நீதியுள்ள குமாரன் தேவைப்பட்டார். அப்போதுதான் தேவனுடைய சாபங்கள் தாவீதின் ராஜ்யத்திற்கு வாக்குப்பண்ணப்பட்ட மகத்தான ஆசீர்வாதங்களுக்கு வழிவகுக்கும்.

இப்போது தாவீதின் பிற்கால சாபங்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை நாம் கருத்தில் கொண்டுள்ளோம், இந்த அத்தியாயங்களின் கிறிஸ்தவ பயன்பாட்டைப் பற்றி விவாதிக்க இருக்கிறோம். தாவீதின் ஆட்சியின் இந்தப் பகுதிக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?

## கிறிஸ்தவ பயன்பாடு

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் பழைய ஏற்பாட்டில் அவருடைய ஜனங்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதைக் கண்டறிய விரும்புகிறார்கள். ஆனால் சாமுவேலின் புத்தகத்தின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த அத்தியாயங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களில் கவனம் செலுத்தவில்லை. அதற்கு பதிலாக, உடன்படிக்கை சாபங்களுடன் தேவன் தாவீதை எவ்வாறு ஒழுங்குபடுத்தினார் என்பதை அவை நமக்குச் சொல்கின்றன. தாவீதின் வாழ்க்கையில் தேவனுடைய சாபங்கள் நமக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை நாம் இயற்கையாகவே அறிய விரும்பாவிட்டாலும், அவை இன்னும் நமக்கு பொருந்துகின்றன. தேவன் நம்மை மிகவும் நேசிக்கிறார், அவர் நம் பாவங்களை கண்டுகொள்ளாமலில்லை. நாம் விசுவாசத்திலும் நீதியிலும் வளரும்படியாக கிறிஸ்துவுக்குள் தாம் நேசிக்கிறவர்களை அவர் சிட்சிக்கிறார்.

தாவீதின் பிற்கால சாபங்கள் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை நாம் சிந்திக்கும்போது, இந்த கணக்குகளை கிறிஸ்துவில் நம் வாழ்க்கையுடன் இணைக்கும் இரண்டு முக்கிய அம்சங்களை மீண்டும் பார்ப்போம். முதலாவதாக, தேவனுடைய உடன்படிக்கைகளின் முக்கியத்துவத்தையும், பின்னர் தேவனுடைய ராஜ்யத்தின் மீது கவனம் செலுத்துவதையும் நாம் கருத்தில் கொள்வோம். ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையுடன் ஆரம்பிக்கலாம்.

## தேவனுடைய உடன்படிக்கைகள்

நாம் பார்த்தபடி, நமது புத்தகத்தின் இந்தப் பகுதியில் தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியல் ஒரு குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது. ஆனால் இந்த அதிகாரங்களில், சாமுவேலின் ஆசிரியர் தாவீதுக்கு தேவன் கொடுத்த தயவைப் பற்றி குறைவாகவும், தாவீது எவ்வாறு தேவனுக்கு உண்மையுள்ளவராக இருக்கத் தவறினார் என்பதிலும் அதிக கவனம் செலுத்தினார். பத்சேபாளுடனான பாவத்தில் பிறந்த தாவீதின் முதல் குமாரனின் மரணம் மற்றும் அவரது குமாரர்களான அம்னோன் மற்றும் அப்சலோம் மூலம் தாவீதின் ராஜ்யத்திற்கு ஏற்பட்ட பயங்கரமான சோதனைகள் கொண்டுவந்த சாபங்களால் தேவன் எவ்வாறு தாவீதை ஒழுங்குபடுத்தினார் என்பதையும் நமது ஆசிரியர் வலியுறுத்தினார். ஆயினும், இந்த கடுமையான சாபங்களின் மத்தியிலும், தாவீதின் உள்ளப்பூர்வமான மனத்தாழ்மைக்கும் மனந்திரும்புதலுக்கும் அவருடைய ராஜ்யத்தை ஆதரிக்கும் ஆசீர்வாதத்துடன் தேவன் இன்னும் பதிலளித்தார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், புதிய ஏற்பாட்டிலிருந்து எடுத்து இந்த உடன்படிக்கை இயக்கவியலை சரியாகப் பயன்படுத்த கவனமாக இருக்க வேண்டும். முதலாவதாக, தாவீதின் பிற்கால சாபங்களைப் பற்றிய விவரம் தாவீதுக்கும் நம்முடைய பெரிய ராஜாவாகிய இயேசுவுக்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாட்டை அமைக்கிறது. தாவீதும் அவருடைய குமாரர்களும் தேவனுக்கு உண்மையாக இருக்க தவறிவிட்டார்கள். அதனால், தங்களுக்கும் தேவனுடைய மக்களுக்கும் கஷ்டங்களைக் கொண்டுவந்தார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால் இயேசு பரிபூரண உண்மையுள்ளவராக இருந்தார், தொடர்ந்து பரிபூரண உண்மையுள்ளவராக இருக்கிறார், எப்போதும் தேவனுக்கு பரிபூரண உண்மையுள்ளவராக இருப்பார். தேவனுடைய ஒவ்வொரு தேவைகளையும் கிறிஸ்து நீதியாய் நிறைவேற்றுவது, இறுதியில், கிறிஸ்துவுக்குட்பட்ட ஒவ்வொருவரும் பிதாவிடமிருந்து நித்திய ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்று நமக்கு உறுதியளிக்கிறது.

ஆனால் இரண்டாவதாக, இன்று கிறிஸ்துவின் சபையானது சரியான பாதையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். தாவீதைப் போலவே இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவனுக்காக காட்டுகிற விசுவாசத்தின் தராதரங்களுக்கு இசைவாக வாழத் தவறுகிறார்கள். மேலும், எபிரெயர் 12:3-17 போன்ற வேத பகுதிகள் நமக்குக் கற்பிக்கிறபடி, நாம் அனைவரும் இந்த வாழ்க்கையில் தேவனின் ஒழுக்கத்தை எதிர்கொள்கிறோம். இரட்சிக்கிற விசுவாசத்தை கொண்டிராமல் தங்களை கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்று அழைக்கிறவர்களுக்கு, இந்த வாழ்க்கையின் துன்பங்கள் இறுதியில் தேவனிடமிருந்து வரும் நித்திய சாபங்களுக்கு வழிவகுக்கும். ஆனால் உண்மையிலேயே மனந்திரும்பி கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை வைத்தவர்களுக்கு, கிறிஸ்து திரும்பி வரும்போது தேவனுடைய சிட்சையின் மத்தியில் அவரைப் பற்றிக்கொள்ளுதல் தேவனிடமிருந்து நித்திய வெகுமதிகளை கொண்டுவரும்.

ஆகவே, பூர்வ இஸ்ரவேலர்கள் தாவீதின் தோல்விகளை ஒதுக்கித்தள்ளி அவருடைய உள்ளப்பூர்வமான மனந்திரும்புதலைப் பின்பற்றியது போலவே நாமும் செய்ய வேண்டும். தாவீது மற்றும் அவரது குமாரர்களின் பாவங்களைத் தவிர்க்க வேண்டும், நாம் தவறு செய்யும் போது, தாழ்மையான மனந்திரும்புதலுடன் தேவனிடம் திரும்ப வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தில் தாவீதின் சுதந்தரத்தை தேவன் இரக்கத்துடன் ஆதரித்ததைப் போலவே, உண்மையான விசுவாசிகளின் சுதந்தரத்தையும் தேவன் தம்முடைய ராஜ்யத்தில் இரக்கத்துடன் ஆதரிப்பார்.

தாவீதின் வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில் ஏற்பட்ட தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியலைப் பற்றிய சாமுவேலின் இந்தப் பகுதியை கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எவ்வாறு பொருத்துவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று பார்த்தோம். ஆனால் இந்த அதிகாரங்களில் தேவனுடைய ராஜ்யம் நமக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தேவனுடைய ராஜ்யம்

புதிய ஏற்பாட்டில், தேவனுடைய ராஜ்யத்தின் கருப்பொருள் இயேசுவை தாவீது மற்றும் அவரது வீட்டின் தோல்விகளை சமாளிக்கும் தாவீதின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குமாரனாக உயர்த்துகிறது. ஆனால் கடைசி நாட்களில், கிறிஸ்து தம்முடைய ஜனங்களின் தோல்விகளை ஒரேயடியாக மேற்கொள்ள மாட்டார். நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, அவர் இந்த வேலையை, அவரது முதல் வருகையின் போது அவரது ராஜ்யத்தின் தொடக்கத்தில்; திருச்சபை வரலாறு முழுவதும் அவரது ராஜ்யத்தின் தொடர்ச்சியில்; அவர் மகிமையில் திரும்பி வரும்போது அவருடைய ராஜ்யத்தின் முடிவில் என மூன்று நிலைகளில் நிறைவேற்றுகிறார்.

இந்த வெளிச்சத்தில், தாவீதின் பிற்கால சாபங்களின் கதைகள் இயேசுவின் ராஜ்யத்தின் தொடக்கத்தில் அவரது வெற்றிகளை அடையாளம் காண உதவுகின்றன. அவருடைய பூமிக்குரிய ஊழியத்தில், கிறிஸ்துவின் நீதியுள்ள சேவை அவருடைய சிலுவை மரணத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. மரிப்பதன் மூலம், தாவீது, அவரது வீட்டார் மற்றும் ஒவ்வொரு உண்மையான விசுவாசியின் பாவங்களுக்கான கிரயத்தை அவர் செலுத்தினார். இதன் காரணமாக, கிறிஸ்து ஆவியானவரின் வல்லமையால் தனது உண்மையுள்ள சேவைக்காக உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலின் வெகுமதியைப் பெற்றார். கிறிஸ்துவிடம் வருகிற ஒவ்வொருவரும் ஆவியின் வல்லமையினால் புதிதான ஜீவனுக்குள் எழுப்பப்படுகிறார்கள். கிறிஸ்துவில், நாம் நித்திய ஜீவனுக்கான பாதையில் அமைக்கப்படுகிறோம்.

இதற்கும் மேலாக, கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியின்போது பரிபூரண நீதியில் சேவிக்கிற வழிகளை நோக்கி இந்த அதிகாரங்கள் நம்மை சுட்டிக்காட்டுகின்றன. திருச்சபையின் வரலாறு முழுவதும், இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் ஆட்சி செய்கிறார். பரலோகத்தில் சிங்காசனத்திலிருந்து பிதாவின் சித்தத்தை ஒவ்வொரு கணமும் நிறைவேற்றுகிறார். இரண்டாயிரம் வருஷங்களுக்கும் மேலாக, தாவீதும் அவருடைய குடும்பத்தாரும் செய்த தவறுகளை இயேசு மாற்றியமைத்திருக்கிறார். சுவிசேஷ அறிவிப்பின் மூலம் தேவனுடைய ஆட்சியை உலகம் முழுவதும் பரப்பியதன் மூலம் அவர் தேவனுடைய ராஜ்யத்தை மேலும் மேலும் விரிவுபடுத்தியுள்ளார்.

நிச்சயமாக, தாவீதின் பிற்கால ஆண்டுகளில் தாவீதின் மீதும் அவரது வீட்டார் மீதும் வந்த சாபங்களை நாம் கருத்தில் கொள்ளும்போது, நம் காலத்தின் முடிவில் கிறிஸ்துவின் வருகைக்காக நாம் ஏங்குகிறோம். கிறிஸ்து திரும்பி வரும்போது, அவர் தேவனுடைய ஒவ்வொரு ஆவிக்குரிய மற்றும் சரீர எதிரிகளை முற்றிலும் தோற்கடிப்பார். அவர் தம்மைப் பின்பற்றும் ஒவ்வொருவரையும் பரிபூரணப்படுத்துவார். தம்முடைய உலகளாவிய ராஜ்யத்திலுள்ள ஒவ்வொருவர் மீதும் அவர் நித்திய ஆசீர்வாதங்களைப் பொழிவார். அந்த நாளில், தேவனுடைய ஜனங்களின் தோல்விகள் ஒரு மங்கலான நினைவாக மட்டுமே இருக்கும். கிறிஸ்துவை ஜெயங்கொண்டு,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவரை நம்புகிற ஒவ்வொருவருக்கும் புதிய சிருஷ்டிப்பின் அளவிட முடியாத மகிழ்ச்சியை வழங்கியவராக நாம் கிறிஸ்துவை கனப்படுத்துவோம்.

தாவீது ராஜாவின் ஆரம்ப ஆண்டுகளில் அவருக்கு கிடைத்த ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் பிற்கால ஆண்டுகளை ஆராய்ந்த பிறகு, 2 சாமுவேல் 21-24 இல் உள்ள நமது ஆசிரியருடைய பதிவின் மூன்றாவது பெரிய பகுதியான தாவீதினுடைய வீட்டாரின் மூலம் இஸ்ரவேல் பெறக்கூடிய தற்போதைய நன்மைகள் என்பததற்கு நாம் திரும்ப வேண்டும்.

# தொடரும் நன்மைகள்

இந்தத் தொடர் முழுவதிலும் நாம் பார்த்தபடி, தாவீதினுடைய வீட்டாரின் கீழ்ப்படியாமையின் காரணமாக பெரும்பாலும் சோதனைகளை எதிர்கொண்ட தனது அன்றைய வாசகர்களை ஊக்குவிக்க சாமுவேலின் ஆசிரியர் எழுதினார். அவர்களுடைய ராஜ்யம் பிளவுபட்டிருந்தது, எதிரிகள் அவர்களைத் தோற்கடித்தார்கள், தேவனுடைய மக்களில் நிறைய பேர் நாடுகடத்தப்பட்டிருந்தார்கள். தாவீதின் பல வருட சாபங்களைப் பற்றிய கதைகள் இஸ்ரவேலுக்கு விஷயங்கள் சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையை அளிக்கவில்லை என்பதை எதிர்கொள்வோம். ஆனால் சாமுவேலின் ஆசிரியர் தனது வாசகர்களுக்கு அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி உறுதியளிக்க விரும்பினார். ஆகவே, எதிர்மறையான குறிப்புடன் தம்முடைய புத்தகத்தை முடிப்பதற்குப் பதிலாக, தாவீதினுடைய ஆட்சியில் வெவ்வேறு காலங்களில் நடந்த அநேக சம்பவங்களை அவர் ஒன்றாகச் சேர்த்து, தாவீதின் குடும்பத்திலிருந்து வந்த ஒரு நீதியுள்ள ராஜா தேவனுடைய ஜனங்களுக்கு இன்னும் கொண்டுவரக்கூடிய ஆசீர்வாதங்களை எடுத்துக்காட்டினார்.

தாவீதினுடைய ஆட்சியின் மற்ற பகுதிகளை நாம் ஆராய்ந்ததைப் போலவே தாவீதினுடைய வீட்டின் தற்போதைய நன்மைகளையும் பார்ப்போம். முதல் பாகத்தில், சாமுவேலின் புத்தகத்தினுடைய இப்பகுதியின் அமைப்பையும், பொருளடக்கத்தையும் ஆய்வு செய்வோம். பின்னர் அதன் கிறிஸ்தவ பயன்பாட்டிற்கு திரும்புவோம். இந்த இறுதி அத்தியாயங்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துடன் ஆரம்பிக்கலாம்.

## அமைப்பும் உள்ளடக்கமும்

முந்தைய பகுதிகளில் நாம் செய்தபடி, தேவனுடைய ராஜ்யம் மற்றும் தேவனுடைய உடன்படிக்கைகளின் அடிப்படையில் இந்த அதிகாரங்களை

முதலில் சுருக்கமாகக் கூறுவோம். ஒருபக்கத்தில், தாவீதினுடைய ஆட்சியின்போது இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யம் வெவ்வேறு காலங்களில் முன்னேறிய சில வழிகளை நமது புத்தகத்தின் முடிவான அதிகாரங்கள் விளக்கவும் மீண்டும் வலியுறுத்தவும் செய்கின்றன. இந்த அதிகாரங்களில், தாவீது தேசத்தின் மீது தேவன் கொடுத்த சாபங்களிலிருந்து நிவாரணம் கொண்டு வந்தார்; தேவன் தாவீதுக்கு மகத்தான வெற்றிகளைக் கொடுத்தார்; மேலும், தனது சொந்த ஏவப்பட்ட வார்த்தைகளில், ராஜ்யம் முன்னேறுவதற்கான கருவியாக தேவன் தனது வீட்டை நியமித்துள்ளார் என்பதை தாவீது மீண்டும் தெளிவுபடுத்தினார்.

மறுபுறம், சாமுவேலின் ஆசிரியர் தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியலின் அடிப்படையில் தாவீது மற்றும் அவரது வம்சத்தின் தற்போதைய நன்மைகளையும் விளக்கினார். தாவீதினுடைய ஆட்சியின் போது பல்வேறு காலங்களில் தேவன் இஸ்ரவேலுக்கு தெய்வீக கருணையை எவ்வாறு வழங்கினார் என்பதை இந்த அதிகாரங்கள் விளக்குகின்றன. தாவீதிடமிருந்தும் அவருடைய சந்ததியாரிடமிருந்தும் தேவன் எவ்வாறு விசுவாசத்தை எதிர்பார்த்தார் என்பதை அவை மெய்ப்பித்துக் காட்டுகின்றன. கீழ்ப்படியாமையும் கீழ்ப்படிதலும் எவ்வாறு சாபங்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் விளைவுகளுக்கு வழிவகுத்தது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். தாவீதின் ஆட்சி முழுவதிலும் இந்த உடன்படிக்கை இயக்கவியலைச் சுட்டிக்காட்டுவதன் மூலம், நமது ஆசிரியர் தனது குறிப்பை தெளிவுபடுத்தினார்: தேவனுடைய ஜனங்களின் ஒவ்வொரு தலைமுறைக்கும் ஆசீர்வாதங்களின் நம்பிக்கை தாவீதின் குடும்பத்தின் நீதியுள்ள ஆட்சியின் மூலம் வரும்.

நமது புத்தகத்தின் இந்த பகுதியின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை கண்டறிவது கடினம் அல்ல. இந்த அத்தியாயங்கள் ஆறு முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன:

- சவுலின் பாவத்தால் ஏற்பட்ட தேவனுடைய சாபத்திலிருந்து இஸ்ரவேல் விடுதலை ஆனது பற்றிய கதை 2 சாமுவேல் 21:1-14 இல் இருக்கிறது.
- 2 சாமுவேல் 21:15-22 இல் தாவீதின் வெற்றிகரமான வீரர்களின் கணக்குகள் உள்ளன.
- 22:1-51 இல் தாவீதின் வம்சப் பாடல் இருக்கிறது.
- 23:1-7 இல் தாவீதின் வம்ச இறுதி வார்த்தைகள் உள்ளன.
- 23:8-38 இல் தாவீதின் வெற்றிகரமான வீரர்கள் மற்றும் அவர்களின் சில வீரச் செயல்களின் பட்டியல் உள்ளன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

- 24:1-25 இல் தாவீதின் பாவத்தால் ஏற்பட்ட தேவனுடைய சாபத்திலிருந்து இஸ்ரவேல் விடுதலை பெறுவதைப் பற்றிய கதை உள்ளது.

இந்த ஏற்பாட்டைப் பற்றி நாம் சில பொதுவான கருத்துக்களைச் சொல்ல வேண்டும். முதலாவதாக, இந்த அதிகாரங்களில் அறிவிக்கப்பட்ட சம்பவங்கள் காலவரிசைப்படி இல்லை. நுட்ப விவரங்களில் அறிஞர்கள் வேறுபடுகின்றனர், ஆனால் அவர்களில் பலர் தாவீதின் பிற்பட்ட ஆண்டுகளில் தேவனுடைய சாபத்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலை பெற்றதைப் பற்றிய முதல் விவரத்தை சரியாக தேதியிட்டுள்ளனர். தாவீதின் வெற்றிகரமான போர்வீரர்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களைப் பற்றிய முதல் குறிப்பு தாவீதினுடைய ஆசீர்வாதத்தின் ஆரம்ப ஆண்டுகளில் நடந்திருக்கலாம். ”கர்த்தர் [தாவீதை] அவருடைய சத்துருக்களெல்லாருடைய கையிலிருந்தும், சவுலின் கையினின்றும் தப்புவித்தார்” என்கிற தாவீதின் வம்ச பாடல் 22:1 இல் அவருடைய ஆட்சியின் ஆரம்பத்திலிருந்தே என்று வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவீதின் வம்சம் பற்றிய கடைசி வார்த்தைகள் அவரது ”கடைசி வார்த்தைகள்” என்று அழைக்கப்படுகின்றன, அவை அவரது வாழ்க்கையின் முடிவில் பேசப்பட்டன என்பதைக் குறிக்கின்றன. தாவீதின் வெற்றிகரமான போர்வீரர்களைப் பற்றிய இரண்டாவது பதிவு, அவருடைய ஆட்சிக்காலம் முழுவதிலும் பல்வேறு இடங்களில் நடந்த சம்பவங்களைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய சாபத்திலிருந்து இஸ்ரவேல் பெற்ற விடுதலையின் இரண்டாவது உதாரணத்தை 1 நாளாகமம் 21 இல் உள்ள அதன் இணையுடன் ஒப்பிடும்போது, இது தாவீதின் ஆரம்ப ஆசீர்வாதத்தின் முடிவில் நடந்த நிகழ்வுகளைக் குறிக்கிறது என்பதைக் காண்கிறோம்.

இந்த அதிகாரங்களை காலவரிசைப்படி ஒழுங்கமைப்பதற்குப் பதிலாக, நமது ஆசிரியர் அவற்றை அவருடைய நோக்கத்தோடு ஏற்பாடு செய்தார் என்பது தெளிவாகிறது. வேதாகமத்தின் பல பகுதிகளில் நாம் பார்ப்பது போல, இந்த அதிகாரங்கள் வேண்டுமென்றே கட்டமைக்கப்பட்டன, இதனால் பிற்கால பிரிவுகள் முந்தைய பிரிவுகளின் தலைப்புகளுக்கு இணையாக இருந்தன அல்லது எதிரொலித்தன.

> 2 சாமுவேலின் இறுதி அதிகாரங்கள் காலவரிசைப்படி இல்லாததாகத் தோன்றுவதற்கான காரணம், அவை காலவரிசைப்படி இல்லை. இது குறுகிய பதிலாகும்... ஆதியாகமம் 37 மற்றும் 38 இல், இதேபோன்ற விஷயம் உள்ளது, அங்கு ஆதியாகமம் 38 தாமாருடன் யூதாவின் பாவத்தைப் பற்றி நமக்குச் சொல்லும்; 37 யோசேப்பை எகிப்துக்கு விற்றதை நமக்குச் சொல்கிறது. அவை ஒழுங்கற்றவை என்று தோன்றுகிறது, நிச்சயமாக, ஒரு மோசமான ஆசிரியர் இதை ஒன்றாக இணைத்தார் என்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> விமர்சகர் கூறுவார். ஆனால் யோசேப்பு ஏன் எகிப்துக்குப் போக வேண்டியிருந்தது என்பதைக் காட்டுவது எழுத்தாளரின் சாமர்த்தியம் தானே? ஏனென்றால் சகோதரர்கள் தங்கள் குடும்ப உணர்வை இழந்து கொண்டிருந்தார்கள், அவர்கள் தேவனை ஆராதிப்பதைப் பற்றிய உணர்வை இழந்து கொண்டிருந்தார்கள், மேலும் அவர்கள் மற்ற தேசங்களுடன் கலக்க அனுமதிக்காத ஒரு இடத்தில் தனிமைப்படுத்தப்பட வேண்டியிருந்தது... நியாயாதிபதிகள் புத்தகத்தின் முடிவில் இதேபோன்ற விஷயம் உள்ளது, அங்கு நீங்கள் பாலியல் மற்றும் வக்கிரம் பற்றிய காரியங்களும் விக்கிரக ஆராதனையும் இருந்ததாகப் பார்க்கிறோம். அவையும் காலவரிசைப்படி இல்லை என்பதை நாம் அறிவோம், ஏனென்றால் பாலியல் ஒழுக்கக்கேடு மற்றும் விக்கிரகாராதனை ஆகியவற்றின் இந்த அத்தியாயங்கள் முழு காலகட்டத்தின் சிறப்பியல்புகளாக இருந்தன என்பதைக் காட்ட ஆசிரியர் விரும்பியிருக்கலாம், முதலில் பல்வேறு நியாதிபதிகளைப் பற்றியும் அந்த நேரத்தில் ராஜ்யத்தின் ஏற்ற தாழ்வுகளை ஆராய்ந்தார், ஆனால் பின்னர் இந்த வக்கிரங்கள் நடந்து கொண்டிருப்பது முழு காலத்தின் சிறப்பியல்பு என்பதைக் காட்ட விரும்பினார். 2 சாமுவேலின் புத்தகத்தில் இதேபோன்ற விஷயம் நடக்கிறது என்று நான் வாதிடுவேன்.
>
> – Dr. சிப் மெக்டேனியல்

நம்முடைய உருவரை குறிப்பிடுகிறபடி, தேவனுடைய சாபத்திலிருந்து விடுதலை என்ற பொருள் இரண்டு முறை தோன்றுகிறது. தாவீதின் வெற்றிகரமான போர்வீரர்களைப் பற்றிய இரண்டு பதிவுகளிலும் இராணுவ விஷயங்களின் மீது கவனம் செலுத்தப்படுகிறது. தாவீதின் வம்ச பாடல் தாவீதின் வம்சத்தின் கடைசி வார்த்தைகளுடன் தொடர்புடையது, ஏனெனில் இந்த இரண்டு பகுதிகளிலும் தாவீது தனது வம்சத்தின் மீது கவனம் செலுத்தினார். இந்த மொழிநடை ஏற்பாட்டில் தலைப்புகளை மீண்டும் மீண்டும் கூறுவது இந்த அத்தியாயங்களில் நமது ஆசிரியருக்கு இருக்கும் முக்கிய ஆர்வங்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது: முதல் மற்றும் கடைசி பகுதிகள் தேவன் இஸ்ரவேல் மீது வைத்த சாபங்களிலிருந்து அவர்களுக்கு கிடைத்த விடுதலையை பரிந்துரைக்கின்றன. இரண்டாவது மற்றும் ஐந்தாவது பிரிவுகள் எதிரிகளுக்கு எதிரான வெற்றியின் ஆசீர்வாதங்களில் கவனத்தை ஈர்க்கின்றன. மூன்றாவது, நான்காவது பகுதிகள், தாவீதின் மீது இருந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுடைய அளவற்ற தயவு அவருடைய வம்சத்திற்கும் பரவியிருந்ததைக் காட்டுகின்றன.

இந்த கருப்பொருள்கள், பிளவுபட்ட ராஜ்யம் அல்லது பாபிலோனிய நாடுகடத்தப்பட்ட சவால்களை சாமுவேலின் ஆரம்ப வாசகர் எதிர்ப்பட்டபோது அவர்களுக்கு இருந்த முக்கியமான பிரச்சினைகளைக் குறிப்பிட்டன. அன்றைய வாசகர்களுக்கு தேவ சாபங்களிலிருந்து நிவாரணம் தேவைப்பட்டது. எதிரிகளை வெல்ல வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்தது. தேவனுக்குப் பிரியமான ஒரு ராஜா அவர்களுக்குத் தேவைப்பட்டார். தாவீதினுடைய ஆட்சியில் நடந்த இந்த சம்பவங்கள், தாவீதின் குடும்பத்தின் நீதியுள்ள ஆட்சியின் மூலம் இந்த வகையான தொடர்ச்சியான நன்மைகள் அவர்களுடையதாக இருக்கக்கூடும் என்பதை அன்றைய வாசகருக்கு உறுதியளித்தன.

தாவீதின் சொந்த வார்த்தைகளைப் புகாரளிக்கும் இரண்டு பிரிவுகளுடன் தொடங்கி, இந்த மொழிநடை ஏற்பாட்டை உள்ளே இருந்து ஆராய்வோம்: 22:1-51 இல் அவரது வம்ச பாடல் மற்றும் 23:1-7 இல் அவரது வம்ச கடைசி வார்த்தைகள்.

## வம்சப் பாடல் (2 சாமுவேல் 22:1-51)

ஒருபுறம், 22:1-51 இல் உள்ள தாவீதின் வம்ச பாடல், சங்கீதம் 18 இன் பதிப்பாகும். இது சவுலிடமிருந்து தாவீது விடுவிக்கப்பட்டதைக் கொண்டாடும் சங்கீதமாகும். சங்கீதம் 18 ஐப் போலவே, தாவீதின் வம்சப் பாடலும் 1-4 வசனங்களில் கர்த்தருக்கான அவரது துதியுடன் தொடங்குகிறது. பின்னர் அது 5-20 வசனங்களில் தாவீதுக்கு கர்த்தர் கொடுத்த விடுதலையை விவரிக்கிறது. 21-29 வசனங்களில், அது தாவீதின் விடுதலைக்கான காரணங்களைக் கொடுக்கிறது. இது 30-46 வசனங்களில் கர்த்தர் கொடுத்த விடுதலையின் விளக்கத்திற்குத் திரும்புகிறது. 47-50 வசனங்களில், அது கர்த்தருக்கு அதிக துதியை அளிக்கிறது.

இப்போது, தேவன் தாவீதை விடுவித்தது எவ்வளவு மகிமையானதோ, அதே மகிமையுடன், 2 சாமுவேல் 22:51 இந்த பாடலைச் சேர்ப்பதற்கான நமது ஆசிரியரின் காரணத்தைப் புரிந்துகொள்ள உதவும் ஒரு முக்கியமான பின்குறிப்பைச் சேர்க்கிறது. அதில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளித்து, தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார் (2 சாமுவேல் 22:51).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்தப் பின்குறிப்பு, எதிர்காலத்தில் இஸ்ரவேலின் ராஜாவின் மூலம் தேவன் என்ன செய்வார் என்பதில் அன்னாள் கொண்டிருந்த நம்பிக்கையை நினைவுபடுத்துகிறது. 1 சாமுவேல் 2:10 இல், அன்னாள் தேவனைப் புகழ்ந்து சொன்னதை நீங்கள் நினைவுகூரலாம்:

> [கர்த்தர்] தம்முடைய ராஜாவுக்குப் பெலன் கொடுத்து, தாம் அபிஷேகம்பண்ணினவருடைய கொம்பை உயர்த்துவார் (1 சாமுவேல் 2:10).

அன்னாளின் துதியைப் போலவே, தேவன் ”பெரிய இரட்சிப்பை” அல்லது ”விடுதலையை” ”தனது ராஜாவுக்கு” கொண்டு வருகிறார் என்று தாவீது பாடினார். தேவன் ”பரலோக நம்பிக்கையுள்ளவர்கள்மேல் மாறாத அன்பு காட்டுகிறார்.” ஆனால், இந்த வார்த்தைகள் அன்னாள் புகழ்வதையும் தாண்டி, ஆசீர்வதிக்கப்பட்ட ராஜாவையும் அபிஷேகம் செய்யப்பட்டவரையும் குறிப்பிட்டன. அது ”தாவீது” தான், தாவீது மட்டுமல்ல, ”அவனுடைய சந்ததியை”யும்கூட இது குறிக்கிறது. 2 சாமுவேல் 7 இல் தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கை சுட்டிக்காட்டியபடி, இந்த நம்பிக்கை தாவீதின் வம்சத்திற்கு ”என்றென்றும்” நீட்டிக்கப்பட்டுள்ளது.

> தேவன் தாவீதின் வம்சத்தை இஸ்ரவேல் மீதும், நிச்சயமாக, அதன் பிற்கால வரலாற்றில், யூதாவின் மீதும் ஒரு நிரந்தர வம்சமாக தேர்ந்தெடுத்தார். அதைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்றால், ஆரம்பத்திலிருந்தே அது ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டது, தேவன் ஏற்கனவே யூதாவை கோத்திரமாக தேர்ந்தெடுத்திருந்தார். ஆட்சியாளர்கள் யூதாவிலிருந்து வரப்போகிறார்கள்... தாவீது ”தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதன்” என்று தாவீதைப் பற்றி அது சொல்கிறது. அதனால்தான் அவரைத் தேர்ந்தெடுத்தார். மேலும் தாவீதின் இருதயம் கர்த்தருக்குப் பிறகு முழுமையாக இருந்தது என்றும் வேதவசனங்கள் கூறுகின்றன. அவர் எல்லா வகையிலும் கர்த்தருக்கு முழுமையாக தன்னை அர்ப்பணித்தார்... நீங்கள் கவனித்தால், தாவீதுக்குப் பிறகு ஒவ்வொரு ராஜாவும், அவர் அடிப்படையில் தாவீதுடன் ஒப்பிடப்படுகிறார், மேலும் ”அவர் தேவனுடைய பார்வையில் சரியானதைச் செய்தார், ஆனால் அவர் தங்கள் பிதாவான தாவீது செய்ததைப் போல கர்த்தரைப் பின்பற்றவில்லை” என்று அவர்கள் சொல்வார்கள். எனவே, ஒரு ராஜா எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு தாவீது சிறந்த உதாரணம் ஆவார், கர்த்தரை நோக்கி தாவீதின் இருதயம் இருந்தது தான் காரணமாகும். அவர் தேவனுக்கு முழுமையாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கீழ்ப்படிந்திருந்தார், அதனால்தான் அவரது வீடு என்றென்றுமாய் இருப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.
>
> – Dr. ரசல் டி. ஃபுல்லர்

## வம்சத்தின் கடைசி வார்த்தைகள் (2 சாமுவேல் 23:1-7)

சாமுவேலின் ஆசிரியர் 23:1-7 இல் தாவீதினுடைய வம்சத்தின் கடைசி வார்த்தைகளில் தாவீதுக்கும் அவரது வீட்டாருக்கும் தேவன் காட்டிய தயவில் கவனத்தை வலுப்படுத்தினார். தாவீதின் பேச்சு தெய்வீக அதிகாரத்தைக் கொண்டிருந்தது என்பதை வலியுறுத்த, வசனம் 1 இந்த பத்தியை தாவீதின் ”செய்தி” என்று இரண்டு முறை பேசுகிறது, நெயும் என்று தமிழில் ஒலிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தை ne'um (נְאֻם) பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் தெய்வீக தோற்றத்தைக் குறிக்க வேத ஆசிரியர்கள் இதே வார்த்தையை பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தினர். வசனம் 2 இல் தாவீதின் கடைசி வார்த்தைகளின் தெய்வீக தோற்றத்தை வலியுறுத்துவதையும் நாம் காண்கிறோம், அங்கு தாவீது இவ்வாறு கூறினார்:

> கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது (2 சாமுவேல் 23:2).

தாவீதின் கடைசி வார்த்தைகளின் நம்பகத்தன்மையைப் பற்றிய எந்தவொரு சந்தேகத்தையும் அகற்ற தேவனுடைய ஆவியின் தூண்டுதலை நமது ஆசிரியர் வலியுறுத்தினார்.

இந்த உரையில் தாவீதின் மூலம் தேவன் என்ன சொன்னார்? 3,4 ஆம் வசனங்களில், 'நீதியோடும் 'தேவபயத்தோடும்' ஆட்சி செய்கிற ஒரு ராஜா தன்னுடைய ஜனங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவார் என்று தாவீது அறிவித்தார். பின்பு, 5 ஆம் வசனத்தில், தாவீது நீதியுள்ள அரசதிகாரத்தின் இந்தப் பொதுவான நியமத்தைத் தனக்கும் தன் வம்சத்திற்கும் பொருத்திப் பிரயோகிக்கத் தொடங்கினார். தன் வீடு தேவனுடைய பார்வையில் விசேஷித்தது என்பதை தாவீது அறிந்திருந்தார். 2 சாமுவேல் 7 இல் தேவன் அவருடன் ஒரு ”நித்திய உடன்படிக்கையை” நிறுவியிருந்தார். ஆகையால், தாவீது தன் கடைசி வார்த்தைகளில், தன் அரச குடும்பம் நீதியுடனும் தேவபயத்தோடும் ஆட்சி செய்யும்போது, அது இஸ்ரவேலுக்கு மிகுந்த ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் என்று குறிப்பிட்டார். இறுதியாக, 6,7 வசனங்களில், தேவன் தன்னுடன் செய்த உடன்படிக்கையை சந்தேகித்தவர்களை தனது வீட்டில் நம்பிக்கையை இழக்க வேண்டாம் என்று தாவீது எச்சரித்தார். அவர் இவ்வாறு கூறினார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கையினால் பிடிக்கப்படக் கூடாததாய் எறிந்துபோடப்பட வேண்டிய முட்களைப் போன்றவர்கள்... அவர்கள் இருக்கிற இடத்தில் தானே அக்கினியால் முற்றிலும் சுட்டெரிக்கப்படும் (2 சாமுவேல் 23:6-7).

இங்கே சாமுவேலின் ஆசிரியர் தனது கால வாசகர்களுக்கு அவர் வழங்கிய அழைப்பை மீண்டும் மீண்டும் கூறினார். அவர்கள் எதிர்காலத்திற்கான தங்கள் நம்பிக்கைகளை தாவீதின் வீட்டில் வைக்க வேண்டும். தேவன் தாவீதின் குடும்பத்தை இஸ்ரவேலின் நிரந்தர வம்சமாக நித்திய உடன்படிக்கையின் மூலம் நியமித்திருந்தார். இந்த அரச குடும்பத்தைத் தவிர இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யத்திற்கு எந்த நம்பிக்கையும் இல்லை.

தாவீதினுடைய வம்சத்தின் மையத்தை மனதில் கொண்டு, தாவீதின் தற்போதைய நன்மைகளின் இரண்டாவது மற்றும் ஐந்தாவது பிரிவுகளுக்குத் திரும்புவோம்; அவையாவன: 21:15-22 இல் தாவீதின் வெற்றிகரமான வீரர்களின் கணக்குகள் மற்றும் 23: 8-38 இல் அவரது வெற்றிகரமான வீரர்கள். இந்த இரண்டு பகுதிகளும் சேர்ந்து, தாவீதினுடைய வம்சத்தின் நீதியுள்ள ஆட்சி இஸ்ரவேலுக்கு அளித்த தேவனுடைய எதிரிகள் மீதான வெற்றி என்கிற பெரிய நன்மைகளில் ஒன்றை சிறப்பித்துக் காட்டுகின்றன.

## வெற்றிகரமான போர்வீரர்கள் (2 சாமுவேல் 21:15-22)

21:15-22 இல் உள்ள தாவீதின் வெற்றிகரமான வீரர்களின் முதல் பதிவு, பெலிஸ்தருக்கு எதிரான நான்கு வெவ்வேறு போர்களில் தேவன் இஸ்ரவேலை எவ்வாறு வெற்றிகளால் ஆசீர்வதித்தார் என்பதை விரைவாக சுருக்கமாகக் கூறுகிறது. தாவீதின் ஆட்சியை ஸ்தாபிப்பதை ஆதரித்த தாவீதின் போர்வீரர்கள் "இராட்சதர்களை" அல்லது பெரிய பெலிஸ்திய போர்வீரர்களைக் கொன்றதாக இந்த வசனங்கள் ஒவ்வொன்றும் சுட்டிக்காட்டுகின்றன. 15-17 வசனங்கள் இந்த கணக்குகள் அனைத்திலும் ஒரு முக்கியமான முன்னோக்கை வழங்குகிறது. இங்கே நாம் வாசிக்கிறோம்:

> தாவீது **விடாய்த்துப்** போனான்... அப்பொழுது தாவீதின் மனுஷர் அவனை நோக்கி: இஸ்ரவேலின் விளக்கை அணைக்காதபடிக்கு, இனி **நீர்** எங்களோடேகூட யுத்தம்பண்ணப் புறப்படுவதில்லை என்று ஆணையிட்டார்கள் (2 சாமுவேல் 21:15-17).

நாம் இங்கே பார்க்கிறபடி, தாவீது "இளைத்துப்போன" போதிலும் தேவனுடைய ராஜ்யம் தோல்வியடையவில்லை. அதற்குப் பதிலாக, தாவீதின் உண்மையுள்ள வீரர்கள் தாவீதின் ஆட்சியைத் தொடர்ந்து ஆதரித்து, அதை விரிவுபடுத்தினார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சாமுவேலின் ஆசிரியர் தனது புத்தகத்தில் இந்த கட்டத்தில் இந்த போர் அறிக்கைகளை ஏன் சேர்த்தார் என்பதைப் புரிந்துகொள்வது கடினம் அல்ல. தாவீதின் குடும்பத்தார் பிற்காலத்தில் பெலவீனப்பட்டதைப் போலவே, அவருடைய நாளில், அவருடைய வம்சமும் பலவீனமாக இருந்தது. ஆனால் தாவீதின் பலவீனத்திலும் தேவன் இஸ்ரவேலை பெரிய வெற்றிகளால் ஆசீர்வதித்திருந்தார். ஒவ்வொரு தலைமுறையிலும் இஸ்ரவேலுக்கும் இது உண்மையாக இருக்கலாம். இஸ்ரவேலின் போர்வீரர்கள் தாவீதின் ராஜ்யத்திற்காக தங்களை அர்ப்பணித்தால், அவர்களும் பெரிய எதிரிகளைத் தோற்கடிப்பார்கள்.

## வெற்றிகரமான போர்வீரர்கள் (2 சாமுவேல் 23:8-38)

23:8-38 இல் உள்ள தாவீதின் வெற்றிகரமான வீரர்களின் இரண்டாவது பதிவு இதே போன்ற கருப்பொருள்களை எதிரொலிக்கிறது. இந்தப் பகுதியில், சாமுவேலின் புத்தகத்தின் ஆசிரியர் தாவீதின் மாவீரர்களில் சுமார் முப்பத்தாறு பேரின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். முதலாவதாக, ’மூன்று பராக்கிரமசாலிகளையும்’ அவர்களுடைய சில வீரச் செயல்களையும் விவரித்தார். பின்பு, தாவீதுக்கு ஆதரவாகவும் துணையாகவும் போரிட்ட ’முப்பது தலைவர்களைப்’ பற்றி நாம் கேள்விப்படுகிறோம். உதாரணமாக, இந்த மனிதர்கள் போரில் பெரும் சாதனைகளைச் செய்தனர், 8 வது வசனத்தில் யோசப்-பாஷெபெத் ”எண்ணூறு பேருக்கு எதிராக தனது ஈட்டியைக் கொண்டு ஒரே நேரத்தில் கொன்றார்” என்று வாசிக்கிறோம். 10-வது வசனத்தில், எலெயாசார் ”எழுந்து பெலிஸ்தரை வெட்டி வீழ்த்தினார் … கர்த்தர் அன்று ஒரு பெரிய வெற்றியைக் கொண்டு வந்தார் என்று வாசிக்கிறோம். 11,12 வசனங்களின்படி, இஸ்ரவேலர் தப்பி ஓடிய பிறகு சம்மா பெலிஸ்தரிடமிருந்து ஒரு நிலத்தை பாதுகாத்தார் என்றும், 18 ஆம் வசனத்தில், அபிசாய் ”முந்நூறு பேருக்கு எதிராக தன் ஈட்டியைப் பிரயோகித்தான்” என்றும், 20,21 வசனங்களில், பெனாயா மோவாபின் இரண்டு வீரர்களை வீழ்த்தினார், ஒரு சிங்கத்தைக் கொன்றார் மற்றும் ஒரு எகிப்தியனைத் தோற்கடித்தார் என்றும் வாசிக்கிறோம். இவர்களில் பலர் பிற்பாடு தாவீதின் ராஜ்யத்தில் அதிகார பதவிகளை வகிக்க வந்தனர்.

தாவீதின் மாபெரும் வீரர்களின் இரண்டு பதிவுகளையும் நமது ஆசிரியர் தனது அசல் வாசகர்களுக்கு நம்பிக்கையை வழங்க வடிவமைத்தார். பிளவுபட்ட முடியாட்சி மற்றும் பாபிலோனிய நாடுகடத்தலின் போது, இஸ்ரவேலின் எதிரிகள் பெரும்பாலும் வெல்ல முடியாதவர்களாக தோன்றினர். ஆனால் தாவீதின் நாளிலிருந்த இந்தப் பெரிய போர்வீரர்களைப் போலவே, இஸ்ரவேலரும் தாவீதிடம் தேவனுடைய தயவில் நம்பிக்கையை விட்டுவிடவில்லை. மாறாக, தாவீதின் வம்சத்தாருக்காக மறுபடியும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வல்லமைமிக்க போர்வீரர்களை எழுப்பும்படி அவர்கள் தேவனை நம்பியிருக்க வேண்டியிருந்தது.

இது தாவீதின் வீட்டின் மூலம் தேவன் வழங்கிய தொடர்ச்சியான நன்மைகளைப் பற்றிய நமது ஆசிரியரின் கவனத்தின் முதல் மற்றும் கடைசி பிரிவுகளுக்கு நம்மைக் கொண்டுவருகிறது. 21:1-14 மற்றும் 24:1-25 இல் உள்ள இஸ்ரவேல் மக்களின் சாபத்திலிருந்து விடுதலை பெற்ற இந்த இரண்டு பதிவுகளையும் பார்ப்போம்.

## தேவனுடைய சாபத்திலிருந்து விடுதலை (2 சாமுவேல் 21:1-14)

தேவனுடைய சாபத்திலிருந்து இஸ்ரவேல் அடைந்த விடுதலையின் முதல் உதாரணம் 21: 1-14 இல் தாவீதின் ஆட்சியின் போது ஏற்பட்ட ஒரு பஞ்சத்தைப் பற்றிய நன்கு அறியப்பட்ட கதையாகும். தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டது என்பதை விளக்குவதன் மூலம் வசனம் 1 மேடையை அமைக்கிறது. பஞ்சம் தொடர்ந்தபோது, தாவீது ஞானத்துக்காக ஜெபம் செய்தார். இஸ்ரவேல் உடன்படிக்கையை மீறி கிபியோனியரைக் கொன்றதால் சவுலும் அவனுடைய குடும்பத்தாரும் இஸ்ரவேலின்மேல் பஞ்சத்தைக் கொண்டுவந்ததாக தேவன் அவனுக்கு வெளிப்படுத்தினார். இப்போது, இந்த நிகழ்வைக்க குறித்த வேதாகம பதிவு எதுவும் இல்லை, ஆனால் இது சவுலின் அரச அதிகாரத்தின் கடுமையான மீறலாகும். யோசுவா 9:15-18 இல், இஸ்ரவேல் கோத்திரத்தார் கிபியோனியரை வரவேற்று பாதுகாப்பதாக சத்தியம் செய்திருந்தனர். ஆனால் சவுல் இந்த ஒப்பந்தத்தை மீறினார், மேலும் அவரது மீறலின் காரணமாக, தேவன் தனது மக்களுக்கு எதிராக பஞ்சத்தின் சாபத்தை அனுப்பினார்.

அதிகாரம் 21:2-6 மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, கிபியோனியருக்கு பிராயச்சித்தம் செய்ய தாவீது எவ்வாறு ஒரு வழியைத் தேடினார் என்பதை விவரிக்கிறது. ஆரம்பத்தில், கிபியோனியர்கள் மனத்தாழ்மையோடு பிராயச்சித்தம் கேட்க மறுத்துவிட்டார்கள். என்றாலும், தாவீதின் வற்புறுத்தலின் பேரில், கிபியோனியர் இந்தக் குற்றத்திற்கு இழப்பீடு கொடுக்க சவுலின் குடும்பத்தாரைக் கேட்டார்கள். சவுலின் குமாரர்களில் ஏழு பேரை மரண தண்டனைக்கு ஒப்படைக்கும்படி அவர்கள் கேட்டார்கள், தாவீது இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டார்.

7-9 வசனங்களில், தாவீது யோனத்தானுக்கு செய்த சத்தியத்தின் காரணமாக மேவிபோசேத்தை மாற்றவில்லை என்று சாமுவேலின் ஆசிரியர் முதலில் விளக்கினார். பிறகு, கிபியோனியருக்கு தாவீது கொடுத்த ஏழு குமாரர்களின் பெயர்களை நம்முடைய ஆசிரியர் பதிவு செய்தார். கிபியோனியர்கள் அவர்களை எப்படிக் கொன்றார்கள் என்பதையும் அவர் விவரித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த கதை 10-14 வசனங்களில் பஞ்சத்தின் முடிவுடன் முடிவடைகிறது. சவுலின் வீட்டாருக்கு இரக்கம் காட்டுவதன் மூலம் தாவீது தொடர்ந்து தன்னை மதிப்புமிக்கவராகக் காட்டினார். சவுலினுடைய குமாரர்களின் உடல்களையும், சவுல் மற்றும் யோனத்தானின் எலும்புகளையும், சவுலின் தந்தையான கீசின் கல்லறையில் அடக்கம் செய்தார். மேலும், தாவீதின் நீதியான மற்றும் மரியாதைக்குரிய செயல்களின் விளைவாக, "அதன் பிறகு தேவன் தேசத்திற்கான வேண்டுகோளுக்கு பதிலளித்தார்" என்று 14 வது வசனத்தின் இரண்டாம் பாதி கூறுகிறது. தேசத்தின் சார்பாக செய்யப்பட்ட ஜெபங்கள் பதிலளிக்கப்பட்டன, பஞ்சம் முடிவுக்கு வந்தது.

சாமுவேலின் ஆசிரியர் இந்தக் கதையை வேறொரு சூழலில் வைத்திருந்தால், அது அவரது வாசகர்களுக்கு பல தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் தாவீதின் ஆட்சியின் தொடர்ச்சியான நன்மைகளின் பின்னணியில், சவுலும் அவரது வீட்டாரும் ஏற்படுத்திய தெய்வீக சாபத்திலிருந்து விடுதலை கொண்டுவருவதில் தாவீதின் பங்கை இது சிறப்பித்துக் காட்டுகிறது. இந்த விவரிப்பில், சவுலின் குடும்பம் இஸ்ரவேலுக்குக் கொண்டுவந்த தெய்வீக சாபத்திலிருந்து கிடைத்த விடுதலை தாவீதின் நீதியுள்ள ஆட்சியின் மூலம் வந்தது என்பதை சாமுவேலின் ஆசிரியர் உறுதிப்படுத்தினார். அசல் வாசகர்களுக்கு இந்த நிகழ்வின் உட்குறிப்பு வெளிப்படையானது. அவர்களுடைய நாளில், தாவீதின் வம்சத்தின் நீதியுள்ள ஆட்சியின் மூலம் தேவனுடைய ராஜ்யம் தேவனுடைய சாபங்களிலிருந்து இன்னும் விடுவிக்கப்படலாம்.

## தேவனுடைய சாபத்திலிருந்து விடுதலை (2 சாமுவேல் 24:1-25)

தேவனுடைய சாபத்திலிருந்து இஸ்ரவேலுக்கு கிடைத்த விடுதலையின் இணையான உதாரணம் நமது புத்தகத்தின் இறுதி அதிகாரமான 24:1-25 இல் தோன்றுகிறது. இது தாவீதின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் இஸ்ரவேல் மீது தேவன் கொடுத்த சாபம் பற்றிய நன்கு அறியப்பட்ட கதையாகும். இந்த விவரம் நாம் பார்த்த கதையை ஒத்திருக்கிறது, ஏனெனில் தாவீது எவ்வாறு தன் மக்களுக்கு எதிராக தேவனுடைய சாபத்திலிருந்து விடுதலை கொண்டு வந்தார் என்பதை அது அறிவிக்கிறது. ஆனால் இது ஒரு மிக முக்கியமான வழியில் வேறுபட்டது: இந்த முறை, தாவீதின் சொந்த பாவத்தின் காரணமாக இஸ்ரவேல் மீது நியாயத்தீர்ப்பு வந்தது.

இந்த இறுதி விவரிப்பு 1-9 வசனங்களில் தாவீதின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் கணக்குடன் தொடங்குகிறது. இப்போது, 1 ஆம் வசனத்தின்படி, தேவன் தாவீதைத் தன் போராளிகளை எண்ணும்படி தூண்டினார். ஆனால் 1 நாளாகமம் 21:1 இல் உள்ள இணையானது விளக்குவது போல, தேவன் இதை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சாத்தானின் கருவியின் மூலம் செய்தார். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பை எடுப்பது ஏன் மிகவும் பாவமானது என்பதை நம்மால் உறுதியாக சொல்ல முடியாது, ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, தாவீது தனது இராணுவத்தின் வலிமையை மதிப்பிடுவதற்கு இந்த மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு உத்தரவிட்டார். இஸ்ரவேலின் பாதுகாப்பிற்காக தாவீது இனிமேலும் தேவனை முழுமையாக நம்பவில்லை என்பதை இந்த நடவடிக்கை சுட்டிக்காட்டியது. எதுவாக இருந்தாலும் சரி, தாவீதின் தளபதி யோவாப் மறுத்தார், ஆனால் தாவீது வற்புறுத்தினார், யோவாப் இணங்கினார்.

கதை பின்னர் தாவீதின் மனந்திரும்புதலையும் தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் 10-17 வசனங்களில் தெரிவிக்கிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்த பிறகு, தாவீது தனது பாவத்தை உணர்ந்து, தேவனுக்கு முன்பாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். தீர்க்கதரிசியான காத் மூலம், கர்த்தர் தாவீதுக்கு சிட்சை ஒன்றை தேர்வு செய்தார். தேவனுடைய மிகுந்த இரக்கத்தை நம்பி, தாவீது மனிதர்களின் கைகளில் விழாமல் தேவனுடைய கைகளில் விழும்படி கேட்டார். ஆனால் கொடிய கொள்ளைநோயின் நியாயத்தீர்ப்பு இஸ்ரவேலின்மீது வந்தபோது, ஏறக்குறைய 70,000 பேர் மரித்தார்கள். கர்த்தருடைய தூதன் எருசலேமை அழிக்க அணுகியபோது, தாவீது தன்னை மேலும் தாழ்த்தினான். 24:17ல் தாவீது கூறினார்:

> இதோ, நான் பாவஞ்செய்தேன், நான் தான் அக்கிரமம் பண்ணினேன். ஆனால் இந்த ஆடுகள், என்ன செய்த**து**? உமது **கை** எனக்கு**ம்** என் தகப்பன் வீட்டுக்கு**ம்** விரோதமாகவும் இருப்பதாக" (2 சாமுவேல் 24:17).

தாவீது தனது குற்றத்தை முழுமையாக ஒப்புக்கொண்டார், மேலும் நியாயத்தீர்ப்பை மக்களிடமிருந்து தாவீதுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் திருப்பும்படி தேவனை அழைத்தார்.

தாவீதின் உள்ளப்பூர்வமான மனந்திரும்புதலுக்கு காத் தீர்க்கதரிசி 18-25 வசனங்களில், அர்வானவின் போரடிக்கும் களத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டும்படி தாவீதுக்கு கட்டளையிட்டார். பல தசாப்தங்களுக்குப் பிறகு, இதே போரடிக்கும் களத்தில்தான் சாலொமோன் ஆலயத்தைக் கட்டினார். தாவீது அந்தத் தேசத்தை வாங்கி, தன் சார்பாகவும் தேசத்தின் சார்பாகவும் உண்மையோடு பலிகளைச் செலுத்தினார். கதை பின்னர் 25 வது வசனத்தில் இந்த வார்த்தைகளுடன் முடிவடைகிறது: "எனவே கர்த்தர் தேசத்திற்கான வேண்டுகோளைக் கேட்டருளினார், இஸ்ரவேலின் மேல் இருந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது."

சாமுவேலின் ஆசிரியர் வேண்டுமென்றே இந்த வழியில் இந்த கதையை முடித்தார், 21 ஆம் அதிகாரத்தில் அவரது முந்தைய விவரிப்புடன் இணையாக இருப்பதைக் காட்டும்படி இப்படிச் செய்தார். தேசத்தின் சார்பாக தேவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தம்முடைய ஜனங்களின் வேண்டுகோள்களை கேட்டார் என்று அறிக்கையிடுவதன் மூலம் இஸ்ரவேலின் சாபத்திலிருந்து இஸ்ரவேலுக்கு கிடைத்த விடுதலையின் இரண்டு தகவல்களும் நெருக்கமாக உள்ளன. இரண்டு சந்தர்ப்பங்களிலும், தாவீதினுடைய செயல்களின் காரணமாக தேவன் தனது சாபங்களை நிறுத்தினார்.

இந்த வெளிச்சத்தில், சாமுவேலின் ஆசிரியர் ஏன் தனது புத்தகத்தை இந்த கதையுடன் முடித்தார் என்பதைப் புரிந்துகொள்வது கடினம் அல்ல. அவருடைய ஆரம்ப வாசகர் இஸ்ரவேல் தேசத்தின்மீது கடுமையான நியாயத்தீர்ப்பு வந்த காலத்தில் வாழ்ந்தனர். ஆனால் இங்கே நமது ஆசிரியர் தனது ஆரம்ப வாசகர்கள் தாவீதும் அவரது குடும்பத்தினரும் அவர்கள் மீது கொண்டு வந்த சாபங்களிலிருந்து எவ்வாறு நிவாரணம் பெற முடியும் என்பதை வெளிப்படுத்தினார். தேவன் தாவீதுக்கு மிகவும் கருணை காட்டினார். மன்னிப்பும் விடுதலையும் தாவீதின் வீட்டின் மூலமாக மட்டுமே வரும் என்பதை ஒப்புக்கொள்வதன் மூலம் அவர்கள் தாவீதிடம் தேவனுடைய தயவில் சார்ந்திருக்க வேண்டியிருந்தது.

தாவீதின் ஆட்சியின் தற்போதைய நன்மைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மனதில் கொண்டு, இந்த அத்தியாயங்களின் கிறிஸ்தவ பயன்பாட்டை ஆராய நாம் தயாராக உள்ளோம். சாமுவேலின் புத்தகத்தின் கடைசி அதிகாரங்களிலிருந்து இன்று நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

## கிறிஸ்தவ பயன்பாடு

நாம் பார்த்தபடி, சாமுவேலின் ஆசிரியர் தாவீதின் ஆட்சியின் தொடர்ச்சியான ஆசீர்வாதங்களுடன் தனது புத்தகத்தை முடித்தார். தாவீதும் அவருடைய அரச வம்சத்தாரும் சந்தித்த தோல்விகளால் வந்த சோதனைகளின்போதும் நம்பிக்கை வைக்க இந்த ஆசீர்வாதங்கள் இஸ்ரவேலரை உற்சாகப்படுத்தின. கிறிஸ்தவர்களாக இருக்கும் நமக்கும் ஊக்கம் தேவை, ஆனால் ஒரு முக்கியமான வேறுபாடு இருக்கிறது. சாமுவேலின் ஆரம்ப வாசகரைப் போலல்லாமல், தேவனுடைய சித்தத்தை எந்த வகையிலும் நிறைவேற்ற ஒருபோதும் தவறாத பெரிய மேசியாவாகிய இயேசுவை நாம் சேவிக்கிறோம். நிச்சயமாக, கிறிஸ்துவின் பரிபூரண ஆட்சி இன்னும் அதன் முழுமையில் வரவில்லை. பாவத்தின் காரணமாக நாம் இன்னும் கஷ்டங்களை எதிர்கொள்கிறோம். இந்தக் காரணங்களுக்காகவே, சாமுவேலின் புத்தகத்திலுள்ள இறுதியில் நமக்கும் நிறைய பாடங்கள் இருக்கின்றன.

சாமுவேலின் இந்தப் பகுதியின் கிறிஸ்தவ பயன்பாட்டை இந்த பாடத்தில் நமது முந்தைய விவாதங்களுக்கு இணையான வழிகளில் அணுகுவோம். முதலாவதாக, நாம் தேவனுடைய உடன்படிக்கைகளைப் பற்றி



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கலந்தாலோசிப்போம், இரண்டாவதாக, தேவனுடைய ராஜ்யத்திற்கு திரும்புவோம். நமது ஆசிரியர் தம்முடைய புத்தகத்தின் இந்தப் பகுதியில் தேவனின் உடன்படிக்கைகளை எவ்வாறு வலியுறுத்தினார்?

## தேவனுடைய உடன்படிக்கைகள்

பல்வேறு வழிகளில், தாவீதின் தொடர்ச்சியான நன்மைகளை சுட்டிக்காட்டும் ஒவ்வொரு அத்தியாயமும் தேவனின் உடன்படிக்கைகளின் அனைத்து இயக்கவியலிலும் கவனத்தை ஈர்க்கிறது. இந்த ஆறு அத்தியாயங்களும் தேவன் தாவீதுக்கும் இஸ்ரவேலுக்கும் தொடர்ந்து கருணை காட்டிய வழிகளை சுட்டிக்காட்டுகின்றன. நன்றியுள்ள விசுவாசத்திற்கான தேவனுடைய தராதரங்களை அவை ஒவ்வொன்றிலும் நம் நூலாசிரியர் காட்டினார். ஒவ்வொரு அத்தியாயமும் கீழ்ப்படியாமைக்காக இஸ்ரவேலுக்கு சாபங்களையும், கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதங்களையும் எவ்வாறு தேவன் கொண்டு வந்தார் என்பதைத் தொடுகிறது.

எப்பொழுதும் போல, தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியலில் இந்த முன்னோக்குகளைப் பயன்படுத்தும்போது புதிய ஏற்பாட்டின் போதனைகளைப் பின்பற்றுவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நமது இருதயங்கள் முதலில் கிறிஸ்துவிடமே திரும்ப வேண்டும். இந்த அத்தியாயங்களில் தாவீதுக்கும் இஸ்ரவேலுக்கும் தேவன் காட்டும் ஒவ்வொரு தயவும், கிறிஸ்துவில் தேவனுடைய பெரிய தயவுகளை நோக்கி நம்மை சுட்டிக்காட்டுகிறது. விசுவாசத்தின் ஒவ்வொரு செயலும் கிறிஸ்துவின் பரிபூரண உண்மைப் பற்றுறுதி எவ்வளவு உயர்ந்தது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இந்த அதிகாரங்கள் தாவீது மற்றும் இஸ்ரவேல் மீது விழுந்த சாபங்களையும் ஆசீர்வாதங்களையும் சுட்டிக்காட்டும்போது, கிறிஸ்து கொண்டுவரும் நித்திய சாபங்களையும் ஆசீர்வாதங்களையும் ஒப்புக்கொள்ள அவை நம்மை அழைக்கின்றன.

ஆனால் கிறிஸ்துவில் கவனம் செலுத்துவது எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு தாவீதின் ஆட்சியின் தொடர்ச்சியான நன்மைகளை நம் சொந்த வாழ்க்கையிலும் பயன்படுத்த வேண்டும். சவுல் மற்றும் தாவீதின் பாவங்களுக்காக தேவன் தேசத்தின் மீது சாபங்களைக் கொண்டு வந்ததைப் பற்றி நாம் வாசிக்கும்போது, தேவன் தம்முடைய சபைக்கு தற்காலிக ஒழுக்கத்தைக் கொண்டுவருகிறார் என்பதை நாம் நினைவுபடுத்துகிறோம். தாவீதைப் போல, தாழ்மையான மனந்திரும்புதலிலும் கிறிஸ்துவில் விசுவாசத்திலும் திரும்புவதன் மூலம் நாம் பதிலளிக்க வேண்டும்.

தாவீதின் வீரர்கள் பெற்ற வெற்றிகளைப் பற்றி நாம் கேள்விப்படும்போது, தேவனுடைய ஜனங்களாக நாம் எதிர்கொள்ளும் தீமைக்கு எதிரான போராட்டங்களில் நமக்கு நம்பிக்கை கிடைக்கிறது. தாவீது தன் மீதும் தன் வீட்டார் மீதும் தொடர்ந்து தேவனுடைய தயவை உறுதிப்படுத்தியதைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போலவே, தன்னுடைய சொந்த தோல்விகளின் மத்தியிலும் நாமும் தேவனில் நம்பிக்கை வைக்கலாம். கிறிஸ்துவுக்குள் இருக்கும் எந்த ஆணையும், பெண்ணையும், பிள்ளையையும் தேவன் முற்றிலுமாக கைவிட மாட்டார்.

> சவுல், தனது சிறந்த தருணங்களில், பெலிஸ்தியரை தோற்கடிக்கிறார், இது ராஜா மீது நம்பிக்கை வைக்க இஸ்ரவேலை ஊக்குவிக்கிறது. ஆனால் சவுல் மிகவும் விசுவாசமற்றவராக இருந்தார், எனவே தேவன் சவுலிடமிருந்து ராஜ்யத்தை எடுத்துக்கொள்கிறார் என்று நமக்குத் தெரியும். "நீங்கள் உங்கள் நம்பிக்கையையும் உறுதியையும் சவுல் ராஜாவிடமிருந்து தாவீது ராஜாவுக்கும் அவருடைய வம்சத்திற்கும் மாற்ற விரும்புகிறேன்" என்று தேவன் சொல்கிறார் ... மோசேயோடு செய்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவனாக இருந்த தாவீதின் அநேக வல்லமையான செயல்களினால் தேவன் இஸ்ரவேல் அனைவரையும் விடுவிக்கிறார் என்பதையும் நாம் காண்கிறோம். மோசேயோடு தேவன் செய்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவனாக இருக்கிற ஒரு மனிதன் மீது உன் நம்பிக்கையையும் வையுங்கள். அது தான் முக்கியம் என்று கூறுகிறார். தாவீது பயங்கரமாக பாவம் செய்தார், அந்த உடன்படிக்கையை மீறினார் என்பது நமக்குத் தெரியும், "நமது விடுதலைக்காக தாவீதிலோ அல்லது அவருடைய சந்ததியிலோ நம்பிக்கை வைக்கலாமா?" என வாசகர்கள் கேள்வி கேட்கிறார்கள்... ஒரு நாள் ஒரு உண்மையுள்ள, நீதியுள்ள ஆட்சியாளர் இருப்பார், அவர் மோசேயுடனான உடன்படிக்கைக்கு முற்றிலும் உண்மையுள்ளவராக இருப்பார், எனவே வரவிருக்கும் தாவீதின் சந்ததியில் உங்கள் நம்பிக்கையை வைக்கவும் என்று சாமுவேலின் புத்தகங்கள் தாவீதுடனும் அவரது சந்ததியினருடனும் தேவன் கிருபையுடன் செய்த நித்திய உடன்படிக்கையை பெரிதும் வலியுறுத்துகின்றன. நியாயப்பிரமாணத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்த, பாவமில்லாத கிறிஸ்துவின் நபராக அவர் வந்திருக்கிறார் என்பதை இப்போது நாம் அறிவோம். அவர்மீதுதான் இன்று நாம் நம்பிக்கை வைக்கிறோம்.
>
> – Dr. ஆண்ட்ரூ பார்லி



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தாவீதினுடைய வாழ்க்கையின் இந்தப் பகுதியில் தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியலை மனதில் கொண்டு, கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதில் கவனம் செலுத்த நம் வாழ்க்கையில் இதை எவ்வாறு பிரயோகிப்பது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தேவனுடைய ராஜ்யம்

இந்த அதிகாரங்களில், தாவீதுக்கும் அவருடைய வீட்டாருக்கும் தயவு காட்டியதன் காரணமாக, இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யம் தோல்வியடையாது என்று சாமுவேலின் ஆசிரியர் தெளிவாக்கினார். அதே வழியில், இயேசு தாவீதின் பரிபூரண நீதியுள்ள குமாரனாக இருப்பதால், தேவன் தாவீதுக்கு வாக்களித்த அனைத்தையும் நிறைவேற்றுகிறார், தேவனுடைய ராஜ்யம் தோல்வியடையாது என்பதை கிறிஸ்துவின் சீஷர்களாகிய நாம் அறிவோம். ஆயினும், நாம் பார்த்தபடி, கிறிஸ்து இந்த நம்பிக்கைகளை அவரது முதல் வருகையின் போது அவரது ராஜ்யத்தின் தொடக்கத்திலும், திருச்சபை வரலாறு முழுவதும் அவரது ராஜ்யத்தின் தொடர்ச்சியிலும், மற்றும் அவர் மகிமையில் திரும்பும்போது அவரது ராஜ்யத்தின் நிறைவிலும் ஆகிய இந்த மூன்று கட்டங்களில் நிறைவேற்றுகிறார்.

முதலாவதாக, சாமுவேலின் இந்த கடைசி அதிகாரங்கள் இயேசு தம்முடைய ராஜ்யத்தின் தொடக்கத்தில் நிறைவேற்றிய எல்லாவற்றையும் நோக்கி நம் இருதயங்களைத் திருப்புகின்றன. தாவீதின் வீட்டாருக்கு தேவனுடைய தயவு கிறிஸ்துவில் நிறைவேற ஆரம்பித்தது. தாவீதின் வீரர்கள் தங்கள் எதிரிகளை தோற்கடித்தது போல, இயேசு தனது மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் ஆகியவற்றில் தீமையை உறுதியாக தோற்கடித்தார். மேலும், தாவீது இஸ்ரவேலை தேவனுடைய சாபங்களிலிருந்து மீட்டபோது, இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை தேவனுடைய நித்திய சாபங்களிலிருந்து காப்பாற்றினார்.

இரண்டாவதாக, கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தின் தொடர்ச்சி முழுவதிலும், தாவீது நிறைவேற்றிய அனைத்தையும் எவ்வாறு முறியடித்தார் என்பதை சிந்திக்கவும் இந்த அதிகாரங்கள் நம்மை அழைக்கின்றன. தாவீதின் மீதும் அவருடைய வீட்டாரிடமும் தேவனுடைய தயவு கிறிஸ்துவின் விரிவடைந்து வரும் ராஜ்யத்தால் நிறைவேற்றப்படுகிறது. தாவீதின் போர்வீரர்களின் சாதனைகள், நம்முடைய யுகம் முழுவதிலும் தேவனுடைய எதிரிகளை இயேசு தொடர்ந்து முறியடிப்பதால் நிறைவேற்றப்படுகின்றன. தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இயேசு நம் சார்பாக பரிந்து பேசுவதால், இஸ்ரவேல் தேசத்தில் தேவனுடைய சாபங்களை நீக்குவதில் தாவீதின் பங்கு ஒவ்வொரு நாளும் பெரிய வழிகளில் நிறைவேற்றப்படுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூன்றாவதாக, தாவீதின் வீட்டின் மீதான தேவனுடைய தொடர்ச்சியான ஆசீர்வாதங்கள் தேவனுடைய ராஜ்யத்தின் எதிர்காலத்தை நோக்கி ஆரம்ப வாசகர்களை சுட்டிக்காட்டியதால், அவை நம் காலத்தின் முடிவில் கிறிஸ்து என்ன நிறைவேற்றுவார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. கிறிஸ்து திரும்பி வரும்போது, அவர் தாவீதினுடைய வீட்டின் மீது தமது உண்மையைக் காண்பிப்பார். அவர் இறுதியாக தேவனுடைய ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான எதிரிகள் அனைவரையும் தோற்கடிப்பார், அவரை விசுவாசிக்கும் அனைவருக்கும் நித்திய ஆசீர்வாதங்களைப் பொழிவார். மேலும், தேசத்தின் மீதான தேவனுடைய சாபங்களிலிருந்து தாவீது விடுதலை கொண்டு வந்ததால், இயேசு மகிமையில் திரும்பி வரும்போது முழு சிருஷ்டிப்பையும் தேவனுடைய சாபங்களிலிருந்து என்றென்றுமாக விடுவிப்பார்.

# முடிவுரை

தாவீது ராஜாவைப் பற்றிய இந்தப் பாடத்தில், தாவீது எபிரோனிலும் எருசலேமிலும் ஆசீர்வாதங்களைப் பெற்ற ஆரம்ப ஆண்டுகளிலிருந்து, பத்சேபாளுடனான அவரது பாவம் அவரது ராஜ்யத்திற்கு ஆரம்ப மற்றும் நீட்டிக்கப்பட்ட தொல்லைகளுக்கு வழிவகுத்த சாபங்களின் பிற்பகுதி வரை தாவீதின் அரசாட்சியை நாம் பின்பற்றுகிறோம். ஆயினும், இந்த சாபங்கள் இருந்தபோதிலும், சாமுவேலின் ஆசிரியர் தனது புத்தகத்தை தாவீதின் வம்ச வார்த்தைகள், வெற்றிபெற்ற வீரர்கள் மற்றும் தேவனுடைய சாபங்களிலிருந்து அவர்களுக்கு கிடைத்த விடுதலை ஆகியவற்றின் கணக்குகளுடன் முடித்தார் என்பதையும் நாம் பார்த்தோம், இது தாவீதினுடைய குடும்பத்தின் நீதியான ஆட்சியின் மூலம் இஸ்ரவேலுக்கு வழங்கப்பட்ட நன்மைகளை விளக்குகிறது.

சாமுவேலின் புத்தகத்தில் தாவீதின் ஆட்சியின் பதிவு இஸ்ரவேல் மக்கள் தங்கள் ராஜ்யத்தின் தோல்விகளை எதிர்கொண்டபோது அவர்களுக்கு முக்கியமான வழிகாட்டுதலை வழங்கியது. தாவீதும் அவரது சந்ததியினரும் தோல்வியுற்றாலும், இஸ்ரவேல் மக்கள் மீது தேவனுடைய சிட்சையை கொண்டு வந்தாலும், விசுவாசிகள் தாவீதுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதிகளில் தங்கள் நம்பிக்கைகளை வைக்க வேண்டியிருந்தது. உண்மையாக சேவை செய்வதற்குக் தேவனுடைய தகுதிகளைப் பூர்த்தி செய்வதற்கு நாம் தொடர்ந்து தவறிவருவதால், நீங்களும் நானும் இன்று சவால்களை எதிர்ப்படுகிறோம். ஆனால் தாவீதினுடைய ஆட்சியின் அற்புதமான கதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாத ஒன்றை நமக்கு நினைவூட்டுகிறது. தாவீதின் குடும்பத்தாருக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நம்முடைய மகா ராஜாவாகிய இயேசுவில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நிறைவேறுகின்றன. தேவன் நம்மை ஆசீர்வதிக்கவும், கிறிஸ்துவுக்குள் நம்மை சிட்சிக்கவும் தயாராக இருக்கிறார். கிறிஸ்து திரும்பி வரும்வரை, புதிய வானங்களிலும் புதிய பூமியிலும் தேவனுடைய மகிமையான ராஜ்யத்தை நாம் சுதந்தரிக்கும்வரை, தேவன் தம்முடைய உண்மையுள்ள ஜனங்களை ஆதரிப்பார் என்பதில் நாம் உறுதிக்கொள்ளலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.